அதிகாரம் 7

# ஆச்சரியமான மெல்கிசேதேக் முறைமையின் ஆசாரியத்துவம்

ஏற்கனவே மெல்கிசேதேக்கை அறிமுகப்படுத்திய பின்பு (5:6, 10; 6:20), ஆசிரியர் மெல்கிசேதேக்கிற்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான ஒற்றுமைகளைப் பற்றிய விரிவான விவாதத்திற்குச் சென்றார். இருப்பினும், முக்கியத்துவம் மெல்கிசேதேக்கிற்கு அல்ல, கிறிஸ்து மீது இருக்கிறது. கிறிஸ்து மெல்கிசேதேக்கை ஒத்திருக்கவில்லை, "ஆனால் மெல்கிசேதேக்கு கர்த்தராகிய இயேசுவை ஒத்திருந்தான்."[1]

தேவனுக்கு முன் மெல்கிசேதேக்கின் அசாதாரண நிலைப்பாடு ஆதியாகமம் 14:17-20-ல் அறிவிக்கப்பட்டுள்ளது, அவனுடைய ஆசாரியத்துவம் சங்கீதம் 110:4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குறிப்பிடத்தக்க மனிதனின் பெயர் புதிய ஏற்பாட்டில் எபிரெயரில் மட்டுமே அல்லாமல், புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை.

பழைய ஏற்பாடு முக்கியமாக கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருப்பதைப் பார்ப்பதற்கு வேதாகமத்தில் எபிரெயரில் உள்ள மேற்கோள்கள் நமக்கு உதவுகின்றன.[2] மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம், கிறிஸ்துவின் ஆசாரிய பாத்திரத்தின் உள்ளார்ந்த புரிதலை அளிக்கிறது. புதிய ஆசாரியத்துவம் புரிந்து கொள்ள முடியாத பண்டைய ஆசாரியன்/ராஜா "முறைமையின்படியானது" என்று கூறப்படுகிறது; இரண்டு ஆசாரியத்துவங்களுக்கிடையில் எழுத்தாளர் விளக்க விரும்பும் ஒரு ஒற்றுமை இருக்கிறது.[3] "தன்னில்தானே நித்தியமாக இருக்கிற ஒரு வகையை ஒருவர் கொண்டிருக்க முடியாது, அப்படியானால், ஒருவன் யதார்த்தத்தைக் கொண்டிருக்க வேண்டும், ஒரு வகை அல்ல."[4] கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் பற்றிய எபிரெயரின் கேள்விக்கு, பழைய ஏற்பாட்டில் இருந்து வகையான ஆதரவு இல்லாமல் எழுத்தாளரால் பதில் கூற முடியவில்லை.

தங்கள் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய "மாம்ச" சம்பந்தமான

கருத்துக்களைக் கூறுவதன் மூலம், வாசகர்கள் தங்கள் ஆவிக்குரிய மந்த நிலையை வெற்றி கொள்ள ஆசிரியர் உதவி செய்து கொண்டிருந்தார். 5:11-6:8 இல் உள்ள கண்டனம் அவர்களை கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் கருப்பொருளில் கவனம் செலுத்தும்படி வலியுறுத்தியிருக்க வேண்டும். தன்னுடைய ஒப்பீடுகளை முழுமையாக்க ஆதியாகமம் 14-ன் பின்னணியும் சங்கீதம் 110:4-ல் உள்ள மேசியாவின் இணைப்பும் ஆகிய இரண்டு விளக்கங்களும் ஆசிரியருக்குத் தேவைப்பட்டன.

ஆபிரகாம், கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்திற்கு முன்னோடினவனாக இருந்த மெல்கிசேதேக்கிற்கு தாழ்வானவனாக இருந்தான். ஆபிரகாமின் மேலும், லேவி மற்றும் ஆரோன் மேலுமான கிறிஸ்துவின் மேன்மையை இந்த உண்மை தெளிவாக காண்பிக்கிறது. எபிரெயர் வாசகர்கள் எந்தவொரு ஏவப்பட்ட பேச்சாளரிடம் இருந்தோ எழுத்தாளர்களிடம் இருந்தோ கிறிஸ்துவின் தெய்வீக பிரதான ஆசாரியத்துவத்தைப் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டது இல்லை என்பதாக தோன்றுகிறது. 8:1 இல் உள்ள வாக்கியத்தை கவனியுங்கள். அவர்கள் அறிந்திருந்த இயேசுவோடு சங்கீதம் 110-ல் குறிப்பிட்டுள்ள மேசியாவை அவர்கள் இணைக்கவில்லை. எனினும், இரண்டு ஆசாரியத்துவங்களும் - மெல்கிசேதேக்கு மற்றும் கிறிஸ்துவுடைய - நீதி மற்றும் சமாதானம் ஆகிய அவர்களின் பண்புகள், அத்துடன் அவர்களின் முடிவற்ற தன்மையின் மூலமாகவும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன.

## ஆபிரகாமும் மெல்கிசேதேக்கும் (7:1-10)

**1இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான
தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த
ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்.
2இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்;
இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின்
ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின்
ராஜா என்றும் அர்த்தமாம். 3இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும்
இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின்
முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு
ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.
4இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்;
கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட
பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான். 5லேவியின்
புத்திரரில் ஆசாரியத்துவத்தை அடைகிறவர்களும், ஆபிரகாமின்
அரையிலிருந்துவந்த தங்கள் சகோதரரான ஜனங்களின் கையிலே**

**நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் வாங்குகிறதற்குக்**
**கட்டளைபெற்றிருக்கிறார்கள். 6ஆகிலும், அவர்களுடைய**
**வம்சவரிசையில் வராதவனாகிய இவன் ஆபிரகாமின் கையில்**
**தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை**
**ஆசீர்வதித்தான். 7சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்,**
**அதற்குச் சந்தேகமில்லை. 8அன்றியும், இங்கே, மரிக்கிற மனுஷர்கள்**
**தசமபாகம் வாங்குகிறார்கள்; அங்கேயோ, பிழைத்திருக்கிறான் என்று**
**சாட்சிபெற்றவன் வாங்கினான். 9அன்றியும், மெல்கிசேதேக்கு**
**ஆபிரகாமுக்கு எதிர்கொண்டுபோனபோது, லேவியானவன் தன்**
**தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், 10தசமபாகம் வாங்குகிற**
**அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று**
**சொல்லலாம்.**

**வசனம் 1.** வசனங்கள் 1 மற்றும் 2 **சாலேம் ராஜா** சம்பந்தப்பட்ட விளக்கத்தின் சுருக்கத்தைக் கூறுகிறது. ஆதியாகமம் 14 எந்த அறிமுகமும் கொடுக்கவில்லை மற்றும் கிட்டத்தட்ட அவனுடைய பின்னணி தகவலும் இல்லை, சங்கீதம் 110:4-ன் மேற்கோளைத் தவிர இந்த அத்தியாயத்தில் எதுவும் கொடுக்கப்படவில்லை. அவன் மட்டுமே அத்தகைய **ஆசாரியன்**/ராஜாவாக இருந்தானா, அல்லது மற்றவர்களும் இந்த முறைமையின் வரிசையில் இருந்தனரா? மெல்கிசேதேக்கு மற்றும் ஆபிரகாமின் நாட்களில் உலகின் பெரும்பான்மையினர் விக்கிரகாராதனைகாரர்களாகவும் ஒழுக்கக் கேடடைந்தவர்களாகவும் இருந்தார்கள், ஆனால் சாலேம் பட்டணத்தில் உள்ளவனைப் போலவே நீதியின் பாதைகளிலுள்ள-மற்றவர்களும் நிச்சயமாக இருந்தனர்.

“மெல்கிசேதேக்கு” என்பது இலக்கியரீதியாக எபிரெயரில் “என்னுடைய ராஜா நீதியுள்ளவர்” என்று பொருள் தருகிறது (பார்க்க வசனம் 2, “நீதியின் ராஜா”). *மெல்கி* என்பது מֶלֶךְ (*மெலெக்*) என்ற வார்த்தையில் இருந்து வந்து “ராஜா” என்று பொருள் தருகிறது. சேதேக் என்பது צַדִּיק (*ட்சாடிக்*) இல் இருந்து வந்து “நீதி” என்று பொருள் தருகிறது.[5] சகரியா 9:9, 10 இன் நிறைவேறுதலாக, கிறிஸ்து “ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்” என்றும் “நீதியானவர்” என்றும் நீதியான ஆளுகையைச் சுட்டிக் காட்டுகிறது. அவர் “நீதியுள்ள கிளையாக,” “ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.” அவர் யூதாவைக் காப்பாற்றுவார், அவருடைய சிங்காசனத்தில் ராஜாவாகவும், ஆசாரியராகவும் ஊழியம் செய்வார் (எரே. 23:5, 6; சக. 6:12, 13).

எபிரெய வார்த்தையில் “சமாதானம்” என்பதற்கு இணையாக உள்ள “சாலேம்” என்பது (பார்க்க வசனம் 2), சங்கீதம் 76:2 இல் சீயோனுடன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஜோஸிஃபஸ் மற்றும் சவக்கடல் சுருள் இந்தப் பட்டணத்தை எருசலேம் என வழங்கினர். உண்மையான சமாதானத்தை - யுத்தத்தை தவிர்ப்பதோடு

மட்டுமல்லாமல், தேவனிடமிருந்து வரும் உள்ளார்ந்த சமாதானத்தைக் கொண்டு வரும் கிறிஸ்துவை மெல்கிசேதேக்கு முன்னறிவித்தான். "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை." என்று இயேசு அறிவித்தார் (யோவான் 14:27).

மெல்கிசேதேக்கு ஒரு சாதாரண மனிதன் தவிர வேறொருவனும் இல்லை என்று பழைய ஏற்பாட்டு சான்று தெரிவிக்கிறது. இது அவனது அடையாளமாக சில தொலைநோக்கு கற்பனைகளையும் நீக்குகிறது. பரிசுத்த ஆவியானவர் அவனது வரலாற்றின் மீது ஒரு திரை இட்டார், இது பிறப்பு மற்றும் மரணம் சம்பந்தமாக கிறிஸ்துவின் ஒரு வகையாக அவன் இருக்க உதவியது என்று தோன்றுகிறது, இந்த ஆசாரியன் மேசியாவுக்கான ஒரு உருவம்/வகை என்பதற்கு ஆதியாகமம் 14 எந்த குறிப்பும் தரவில்லை, ஆனால் சங்கீதம் 110:4 அவனுடைய தீர்க்கதரிசன அடையாளங்களை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வலது பாரிசத்தில் கிறிஸ்து ஆட்சி செய்வதை முன்னறிவிக்கிறது என்று சங்கீதம் 110:1 ஐ பேதுரு மேற்கோள் காட்டினான் (அப். 2:34).

**வசனம் 2.** மெல்கிசேதேக்கு தசமபாகங்களைப் (**கொள்ளையிடப்பட்ட பொருட்கள் எல்லாவற்றிலும் பத்தில் ஒரு பகுதி**) பெற்றுக்கொள்வதற்கு தகுதியுள்ளவர் எனக் கருதிய **ஆபிரகாமால்** மிகவும் மதிக்கப்பட்டான். எபிரெயருடைய தந்தை ஏன் இந்த காணிக்கையை மெல்கிசேதேக்கிற்குக் கொடுத்தான்? ஆதியாகமம் 14:22-24-ல் ஆபிரகாம் தேவனிடம் ஒரு ஆணையிடுவித்துக் கொடுத்ததால் தனக்காக எதுவும் எடுத்துக் கொள்வதில்லை என்று கூறினான். மெல்கிசேதேக்கிற்கு காணிக்கை கொடுப்பது தேவனுக்குக் கொடுப்பதாகும் என்று அவன் அறிந்திருந்தான். ஆபிரகாம் அப்படிப்பட்ட காணிக்கை கொடுக்க வேண்டும் என்று எந்த ஒரு பிரமாணமும் கேட்கவில்லை என்பது நமக்குத் தெரியும். எனினும், அவன் கோத்திரப்பிதாக்களின் காலத்தில் தேவனுடைய மார்க்கத்தை கடைப்பிடிப்பதில் வெளிப்படையாகவே அவ்வாறு செய்தான்.[6] தேவனால் நியமிக்கப்பட்ட மனிதர்கள் ஆசாரியர்களாக இருந்து, ஆராதிப்பதில் வழிநடத்தி ஆராதனை செய்யும் முறை இருந்தது என்பதைத் தெரிவிக்கிறது. யோபு மற்றும் எத்திரோ (மோசேயின் மாமன்; யாத்திராகமம் 3:1; 18:1-27) ஆகிய இருவரும் இந்த பிரிவினராக இருக்க சாத்தியம் உள்ளது. இந்த வகையான ஆராதனை முறை வரலாற்றில் இருந்து எப்போது நீக்கப்பட்டது என்பதை, நாம் உறுதியாக சொல்ல முடியாது, ஆனால் கிறிஸ்துவின் வருகைக்கு முன்பே இது நிகழ்ந்திருக்க வேண்டும். கி.பி. முதலாம் நூற்றாண்டில், மோசேயின் நியாயப்பிரமாணத்தைத் பின்பற்றி வந்த புறஜாதிகள் அல்லது அவர்களின் இதயங்களில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு

நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்த சிலர் இருந்தார்கள், பெரும்பாலோர் தேவனை விட்டுவிட்டார்கள்; இதன் விளைவாக அவரும் அவர்களை விட்டுவிட்டார் (காண்க ரோமர் 1:18, 24, 28; 2:14, 15).

**வசனம் 3.** யூத அமைப்பில் ஆசாரியத்துவத்திற்கு நியமனம் செய்யும் முறைமை ஒரு நீதியுள்ள வாழ்வையும் நேரடியான வம்சாவளியினரையும் உள்ளடக்கியது (எபி. 5:4-6). அந்த நாட்களில் சரியான பதிவுகளை வைத்திருந்ததால் லேவிய ஆசாரியர்களின் வம்சாவளியினர் எளிதில் கண்டுபிடிக்கப்படலாம். தங்கள் வம்சாவளியை சரிவர நிரூபிக்க முடியவில்லை என்றால் விஷயம் தீர்க்கப்படும் வரை அதிகாரப்பூர்வமானதாக்கப்பட முடியாது என்பதை எஸ்றா 2:62, 63 மற்றும் நெகேமியா 7:63-65 காண்பிக்கிறது. ஆயினும், மெல்கிசேதேக்கு, லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவனும் அல்ல ஆரோனின் பிரதான ஆசாரியருடைய குடும்பத்தாரைச் சேர்ந்தவனும் அல்ல. வேத வாக்கியங்களில் காணப்படாதது எதுவோ அது தேவனுடைய பதிவுகளானாலும் அவருக்கு கீழ்ப்படிவதன் மூலம் நம்முடைய செயல்களுக்கு உரியதானாலும் உண்மை எனக் கூறப்படக்கூடாது என்பதை அவனுக்கு வம்ச அட்டவணை இல்லாமை வலியுறுத்தியது. இந்த விஷயத்தை உறுதிப்படுத்துவதற்காக கிரேக்க இலக்கியத்தில் வேறு எங்கும் காணப்படாத ἀγενεαλόγητος (*அஜினியலஜிடோஸ்*, **வம்ச அட்டவணை இல்லாமல்**) என்ற வார்த்தையை ஆசிரியர் பயன்படுத்தினார். ஆசாரியர்களைப் பற்றிய ஒரு புதிய யோசனையாக சரியான வம்ச வரலாறு உள்ள லேவியரின் ஆசாரித்துவத்திற்கும் வம்சாவழியற்ற தேவை உள்ள கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை வலுப்படுத்த அவர் அதை உருவாக்கியிருக்கலாம்.

ஆகவே, *ஆசாரியத்துவத்தில்* மெல்கிசேதேக்கு **தகப்பனும்**, **தாயும் இல்லாமலும்** இருந்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஒருவனுக்குத் தன்னுடைய பெற்றோரின் பதிவு ஏதும் இல்லை என்றால் "தகப்பன் இல்லாதவன்" என்று ரோமர்கள் பேசினார்கள். பெற்றோரை அறியாதவர்கள் மற்றும் வம்ச வரலாறுகளில் காணப்படாதவர்களை தாய் இல்லாதவன் அல்லது தகப்பன் இல்லாதவன் என்று யூதர்கள் குறிப்பிட்டார்கள்.[7] மாற்றப்பட்ட புறஜாதியானுக்குத் தகப்பன் இல்லை என்று ஒரு யூத மதகுரு கூறுவான்.[8] ஜோஸிஃபஸ் தனது வாசகர்களிடம் தான் ஒரு ஆசாரியக் குடும்பத்தில் பிறந்தவன் என்றும் அதை அவர் பொது பதிவுகள் மூலம் நிரூபிக்க முடியும் என்றும் கூறினார்.[9]

மெல்கிசேதேக்கு பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட முதல் ஆசாரியன். அவன் மனித உருவிலான கிறிஸ்துவாக இருந்தான் என்ற கற்பனையான யோசனை, அவன் **தேவனுடைய குமாரனைப்போல் உண்டாக்கப்பட்டான்** என்ற அறிக்கையினாலே நீக்கப்பட்டது;

அவரைப் *போல* இருப்பது, அவன் அதே நபராக இருக்க முடியாது. அவன் ஒரு “மனிதன்” தான் (வசனம் 4). மெல்கிசேதேக்கு **தேவனுடைய குமாரனைப் போலவே** இருந்தான், ஆனால் அவன் தேவனுடைய குமாரன் அல்ல. மெல்கிசேதேக்கிற்கு ஆசாரியத்துவத்தில் பதிவு செய்யப்பட்ட முன்னோர்கள் எவரும் இல்லை என்பதால், அவன் நம்முடைய கர்த்தராகிய ஆசாரியரைப் போல ஊழியஞ்செய்வான் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. அவன் லேவியின் சந்ததியில் இல்லை, ஆனால் நேரடியாக ஆபிரகாமால் ஆசாரியனாக நியமிக்கப்பட்டான் என்பதால், மெல்கிசேதேக்கு இயேசுவின் ஆசாரியத்துவத்தை முன்னிலைப்படுத்தினான். சுமார் ஐநூறு ஆண்டுகளுக்குப் பின்னர், சங்கீதம் 110:4 இல் இந்த முறைமை வேறு ஒருவரால் பின்பற்றப்படுமென குறிக்கப்பட்டுள்ளது. நமது கர்த்தருடைய ஆசாரிய தகப்பனின் குறைபாடு, அவர் நமது பிரதான ஆசாரியனாக இருப்பதற்கு அவரைத் தகுதியற்றவராகச் செய்யவில்லை.

**அவர் ஒரு நிலையான ஆசாரியனாக இருக்கிறார்.** “என்றென்றும்” (7:17, 21) மற்றும் “நிலையான” (7:3) என்பது பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பொருள் கொள்வது போல, காலவரை பொருந்துகின்ற காலம் முழுவதும் என்று பொருள் தருகிறது. ரோமர்கள் “தொடர்ச்சியான சர்வாதிகாரி” என்ற பெயரை ஒரு சாதாரண சர்வாதிகாரியை விட மிகவும் கௌரவமான அதிகாரிக்கு பயன்படுத்தினர்.[10] ஒரு சர்வாதிகாரி அல்லது ஒரு சீசர் என்றென்றும் வாழ முடியாது; ஆனால் எந்த சாசனமும் ரோம பேரரசரின் பதவிக்காலத்தை மட்டுப்படுத்தவில்லை என்பதால், அவருடைய ஆட்சி “என்றென்றைக்கும்” என்று கூறப்பட்டது.

**வசனங்கள் 4-7.** கிழக்கத்திய ராஜாக்களைக் கைப்பற்றி, லோத்து மற்றும் அவனது குடும்பத்தை மீட்டெடுத்த பின்பு, **ஆபிரகாம்** எபிரோனுக்கு திரும்பிச் செல்லும்போது எருசலேமுக்கு அருகே உள்ள பகுதிகளைக் கடந்து சென்றான் (ஆதி. 14). வெற்றியின் உற்சாகம் மற்றும் போரின் **கொள்ளைப்பொருளை** மீண்டும் கொண்டு வருவதன் மகிமையானது, மீட்கப்பட்டவர்களிடமிருந்து அவன் பெற்றிருக்க வேண்டிய நன்றியுணர்வு மற்றும் மரியாதையை விட குறைவாகத் தெரிகிறது (வசனம் 4). சந்தேகத்திற்கிடம் இல்லாமல், அவன் அந்த நேரத்தில் இப்பகுதியில் மிகவும் மதிக்கப்பட்ட மனிதனாக இருந்தான். ஆபிரகாம் தேவனுக்கு நன்றியை காண்பிக்க விரும்பினான், அதை அவன் அறிந்திருந்த மிகச் சிறந்த வழியில் யெகோவாவின் பிரதிநிதியான, “சாலேமின் ராஜாவும்,” “உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாகிய” மெல்கிசேதேக்குவிற்கு கர்த்தருடைய கிரியைகளுக்காக ஒரு பெரிய பங்களிப்பைக் கொடுப்பதன் மூலம் செய்தான்.’[11] ஆபிரகாமின் இந்தச் செயல், தேவனுடைய பார்வையில் தன்னைக் காட்டிலும் ஆசாரியன்/ராஜாவை உயர்ந்தவனாகக்

கருதினான் என்பதைக் காட்டியது (காண்க வசனம் 7). மெல்கிசேதேக்குக்கு அவனது காணிக்கையை செலுத்தி, ஆசாரியனின் ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் அவன் இவ்விரண்டையும் ஏற்றுக்கொண்டான். அந்த மனிதனின் மேன்மையை அவன் எப்படி அறிந்திருந்தான் என்பதை நாம் யூகிக்க மட்டுமே முடியும். அவனுக்கு ஒரு வெளிப்பாடு கொடுக்கப்பட்டிருக்கலாம், அல்லது மெல்கிசேதேக்கு தேவனுடைய ஆசாரிய வல்லமையில் ஊழியம் செய்தான் என்று பொதுவாக அறியப்பட்டிருக்கலாம்.

ஆரம்ப காலங்களில் இருந்து தேவனுக்குக் கொடுக்கப்பட்ட பொதுவான காணிக்கையாகிய **பத்தில்** ஒரு பங்கை (தசம பாகம்) ஆபிரகாம் தேர்ந்தெடுத்தான்.[12] மெல்கிசேதேக்கு ஒரு தசமபாகத்தை கேட்கவில்லை, ஆனால் அவன் அதை ஏற்றுக் கொண்டு, பதிலுக்கு ஆபிரகாமை கருணையுடன் ஆசீர்வதித்தான். அவன் அவ்வாறு செய்ய வெளிப்படையாக தேவனுடைய அதிகாரத்தையும் வல்லமையையும் பெற்றிருந்தான். தேவனுடைய பிரதிநிதியாக, மெல்கிசேதேக்கிற்கு தம் சொந்த ஜனங்களிலிருந்து மட்டும் அல்லாமல், உண்மையாக ஆராதிக்கிற அனைவரிடமிருந்தும், தசமபாகங்களை எடுத்துக் கொள்ள உரிமை இருந்தது. லேவிய ஆசாரியர்கள் இஸ்ரவேலர்களிடமிருந்து மட்டுமே காணிக்கையைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள்.[13] இது ஆரோனின் ஆசாரியத்துவத்தின் மீது மெல்கிசேதேக்கின் மேன்மைக்கான ஒரு அறிகுறி. தசம பாகம் **லேவியின் புத்திரருக்கு** (லேவியர்கள்) கொடுக்கப்பட்டது ஏனெனில் அது தேவனுடைய பிரமாணமாகும் (வசனம் 5). ஆகையால், அது தனிப்பட்ட மனிதனால் தேர்வு செய்யப்படுவது இல்லை; இது தேவனால் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆபிரகாமால் கொடுக்கப்பட்ட தசம பாகம் அந்த நேரத்தில் தேவனுடைய நேரடி அல்லது குறிப்பிட்ட கட்டளை இல்லாமல் இருந்ததாக தெரிகிறது; அவனுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் கொடுக்கும் நிலையான நடைமுறை தெரியும். மெல்கிசேதேக்கு தசமபாகத்தை ஏற்றுக்கொண்டான், ஏனென்றால் அவன் தேவனுடன் தன் சொந்த நிலைப்பாட்டை அறிந்திருந்தான்.

***சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்***, அதற்குச் சந்தேகமில்லை என்ற வார்த்தைகள் (வசனம் 7) ஆபிரகாமை விட மெல்கிசேதேக்கு பெரியவன் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. யோபுவைப் போல ஒரு சிறிய மனிதன், "ராஜாவை ஆசீர்வதித்த" பொழுது (2 சாமு. 14:22), அவர் அரசாட்சி செய்பவருக்கு கனமும் மரியாதையும் செலுத்துவதாகத் தெரிகிறது. ஆபிரகாம் **முற்பிதாவாக** இருந்தபோதிலும் (πατριάρχης, *பேட்ரிஆர்க்ஸ்*; வசனம் 4), எபிரெயரின் ஆசிரியர் தனது வாசகர்கள் மெல்கிசேதேக்கை விட ஆபிரகாம் தாழ்ந்தவன் என்பது உண்மை என்று புரிந்து கொண்டார்களா என்ற கேள்வியைக் கேட்கவில்லை. "முற்பிதா" என்ற பெயர் ஆபிரகாமின்

மகத்துவத்தைக் காட்டுகிறது; அவர் யூத மக்களை தோற்றுவித்தவர் என்ற முக்கியத்துவம் வாய்ந்தவர் என்று அது கூறுகிறது.[14] மெல்கிசேதேக்கு, “முற்பிதாவிலும்” உயர்ந்தவன் என்பதால் அவனுடைய ஆசாரிய முறைமை (கிறிஸ்து உட்பட) ஆபிரகாமின் வம்சாவளியை விட உயர்ந்ததாக இருக்க வேண்டும். இவ்விதமாக எபிரெய வாசகர்கள் இயேசுவை நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக லேவிய ஆசாரியத்துவத்தின் மீது சார்ந்திருக்க முடியாது.

மெல்கிசேதேக்கின் ஆசீர்வாதத்தை ஆபிரகாம் ஏற்றுக்கொள்ளுதல் முற்பிதா மற்றும் அவன் சந்ததியாரின் தாழ்ந்த நிலையை மேலும் சுட்டிக்காட்டுகிறது. இந்த ஆசீர்வாதம், ஆபிரகாமின் நலனுக்கான வெறும் விருப்பத்தை விட அதிகமானது, ஏனென்றால் எந்தவொரு மனிதனும் இத்தகைய ஆசீர்வாதத்தைக் கொடுக்க முடியும். மாறாக, ஆசீர்வதிப்பதற்கான தேவனுடைய நோக்கத்தை அறிவிப்பதற்கான ஒரு அங்கீகாரத்தை அது சுட்டிக்காட்டியது. கோத்திரப்பிதாக்களின் காலத்தில் நடைமுறையில் இருந்த அதே முறைப்படி, ஈசாக்கு மற்றும் யாக்கோபு தெய்வீக தீர்க்கதரிசன வழிகாட்டுதலின் கீழ் தங்கள் குழந்தைகளை ஆசீர்வதித்தனர் (11:20, 21; காண்க ஆதி. 27; 49). நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ள ஆசாரியர்களும் தேவனுடைய ஆசீர்வாதங்களை அறிவிக்கலாம். ஆபிரகாமின் மீதான ஆசீர்வாதம் அதற்கு ஒப்பாக இருந்திருக்க வேண்டும். அவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவதை விட அதிகமாக இருந்திருந்த இயேசுவுடைய சீஷர்களின் ஆசீர்வாதத்தைப் போல் இருந்தது (லூக். 24:50, 51).[15] மெல்கிசேதேக்கு விஷயத்தில் அவன் உயர்ந்தவனாய் இருந்து தாழ்வான, ஆபிரகாமை ஆசீர்வதித்தது போலவே, இயேசுவின் ஆசீர்வாதம் உயர்ந்த ஒருவரிடம் இருந்து பல தாழ்ந்த பெறுநர்களிடம் சென்றது (வசனம் 7).

**வசனம் 8.** மெல்கிசேதேக்கின் மரணம் அல்லது ஒரு ஆசாரியனாக அவனது மறைவு என வேத வாக்கியங்களில் பதிவு ஏதும் இல்லை. அதற்கு பதிலாக, எழுத்தாளர் **அவர் வாழ்கிறார்** என்று கூறினார், **அது சாட்சி ஆனது** (μαρτυρέω, *மர்ச்சூரிஓ*) என்பது ஆதியாகமத்தில் காணப்படும் உரைக்கு ஒரு ஈர்க்கும் அம்சம் என்று கூறலாம். இதே போன்ற சொற்றொடர்கள் எபிரெயரில் ஏழு தடவை பயன்படுத்தப்படுகின்றன, அவற்றில் இரண்டு பழைய ஏற்பாட்டு கூற்றுகளைக் குறிப்பிடுகின்றன (7:17; 10:15). அதுவே, “ஆசிரியர் அதிகாரப்பூர்வ ஆதாரத்தின் அடிப்படையாகக் தனது கூற்றைக் கொண்டிருக்கிறார் என்ற ஒரு நுட்பமான நினைவூட்டலை” அளித்து, இங்கு தெளிவான உண்மையாக இருக்கிறது.[16]

மெல்கிசேதேக்கின் மரணத்திற்கு சான்றாக ஒரு பதிவு இல்லை என்பது லேவியரின் முறைமைக்கு நேர் மாறானதாக உள்ளது. மெல்கிசேதேக்கின் பதிவைப் பொறுத்தவரை, அவன்

என்றென்றும் வாழ்கிறான். ஆரோனுடைய முறைமையின் கீழ் ஊழியம் செய்தவர்கள் மரித்து விட்டார்கள், அவர்களுடைய மரணங்கள் பதிவு செய்யப்பட்டன; ஆனால் அது மெல்கிசேதேக்கின் முறைமையின்படியானவர்களுக்கு அவ்வாறு இருக்கவில்லை (மற்றவர்கள் இருப்பதாகக் கருதி). நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த பிரதான ஆசாரியர்கள் குறித்து, அவர்களின் மரணம் பற்றிய தகவல்கள் உட்பட கவனமான பதிவுகள் வைக்கப்பட்டிருந்தன (1 நாளா. 6:50-53). அத்தகைய பதிவுகளை வைத்திருப்பது முக்கியமானது ஏனென்றால் ஆரோன் குடும்பத்தினருக்கும், லேவி கோத்திரத்தாருக்கும், ஆசாரியத்துவத்திற்கு வம்ச வரலாறு அவசியமாக இருந்தது. மெல்கிசேதேக்கு முற்றிலுமாக வம்ச வரலாறு இல்லாதவன்.

ஆசிரியர் அவனது சரீரம் பிரகாரமான வாழ்க்கையை குறிக்காமல், ஆசாரிய ஊழியத்தின் காலத்தைப் பற்றி பேசுகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த உலகில், **சாவுக்குரிய மனிதர்கள் தசமபாகத்தைப் பெறுகிறார்கள்.** மெல்கிசேதேக்கின் மரணம் பற்றி வேதாகமத்தில் எந்தப் பதிவும் கொடுக்கப்படவில்லை என்பதால், அவனுடைய ஆசாரியத்துவம், மரித்து, ஆனால் தனது ஆசாரியத்துவத்தைத் தொடங்க மீண்டும் உயிரோடெழுந்த இயேசுவுக்குச் சரியான அடையாளமாக இருந்தது. வேத வாக்கியங்கள் பதிவு செய்து அவர் உயிரோடிருக்கிறார் என்று சாட்சி பகர்கின்றன! அவருக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதால், கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் தொடர்ச்சியாக இருக்கிறது என்பதை இயல்பாகவே கருத்தில் கொள்ளலாம்.

இந்த கட்டம் வரை, மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்திற்கும் லேவிய ஆசாரியத்துவத்திற்கும் இடையில் எந்த ஒப்பீட்டையும் நாம் காணவில்லை. மெல்கிசேதேக்கை விட ஆபிரகாம் தாழ்வாக இருந்தால், பின்பு லேவியின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்கை விட தாழ்வானதாகும். "தன்னுடைய வாதத்தை உறுதி செய்யும் பொருட்டு, அவர் லேவியும் ஆபிரகாம் மூலம் தசமபாகங்கள் செலுத்தினான் என்று கூறும் போது. ஆசிரியர் இங்கே மிகவும் அடிப்படையான எபிரெய கருத்துக்களில் ஒன்றை பயன்படுத்துகிறார்."[17]

**வசனங்கள் 9, 10. அன்றியும் சொல்லலாம்** (வசனம் 9) என்பது, சொல்லாட்சி மிகுந்த திடுக்கிடச் செய்யும் கூற்றுகளை வரையறுக்கவும், தவறாக புரிந்து கொள்வதில் இருந்து பாதுகாக்கவும் கிரேக்க எழுத்தாளர்களால் உபயோகப்பட்ட பொதுவான வெளிப்பாடாகும்.[18] நிச்சயமாக, **லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால்**, (நிஜத்தில் லேவி ஆபிரகாமின் அரையில் இல்லை), இது ஆபிரகாமின் சந்ததியாராக லேவியை அடையாளப்படுத்தும் ஒரு வெளிப்பாடாகும். இன்னும் சரியாக, "அவன் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை" என்று மொழிபெயர்க்கலாம்.[19]

ஆபிரகாம் யூத குடும்பத்தின் தலைமை பிரதிநிதி என்பதால், அவனது செயல்கள், ஒரு பொருளில், அவனது சந்ததியினருக்கு அடையாளமாக இருக்கலாம். ரோமர் 5:12-14 மற்றும் 1 கொரிந்தியர் 15:22 ஆகியவற்றில் ஆதாமுடன் சம்பந்தப்பட்ட பயன்பாட்டில் இது தெரிகிறது. ஆல்பெர்ட் பார்ன்ஸ் இந்த விளக்கத்தை ஆங்கில பொது சட்டத்தின்படி கொடுத்தார்: "ஒரு தூரமான முன்னோர், மற்றொரு வர்க்கம் அல்லது பெயரில் பிறந்த முன்னோருக்கு அஞ்சலி செய்தார் அல்லது விசுவாசம் வைத்திருந்தார் என்ற உண்மை, குடும்பத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட தாழ்வுக்கான ஆதாரமாக கருதப்பட்டு, ஒரு வாதத்தில் ஆற்றல் மற்றும் உரிமையுடன் பயன்படுத்தப்படலாம்."[20] அதுபோலவே, ஒரு தந்தை சில நிலங்களை விற்று விட்டால், வாரிசு தான் அதை விற்று விட்டது போல இருக்கும் என்பதையும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விவாதத்தில் உள்ள உண்மையான வித்தியாசம், **மெல்கிசேதேக்கின்** ஆசாரியத்துவத்தின் முறைமைக்கும் ஆரோனை இளைய சந்ததியாகக் கொண்ட லேவியின் முறைமைக்கும் இடையிலுள்ளதாகும். எபிரெயரில் உள்ள முக்கிய குறிப்பு, மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம்/அரசாட்சி அல்ல, ஆனால் கிறிஸ்துவும் தேவனுடைய திட்டத்தில் அவரது பங்கும் ஆகும்.

ஆபிரகாம் தானே ஒரு ஆசாரியனாக இருந்து தொடர்ந்து பலிகளை செலுத்தி வந்தான் என்றும் தேவனோடு பேசிக்கொண்டிருந்தான் என்றும் ஒரு நியாயமான வாதம் செய்யப்படலாம். இருந்தாலும், மெல்கிசேதேக்கு தன்னை விட உயர்ந்தவன் என்று அவன் எண்ணினான். மேலும், இஸ்ரவேலில் உள்ள ஆசாரியர்களின் பங்கு பற்றி பின்னர் குறிப்பிட்டுள்ளபடி, ஆபிரகாம், மற்ற மக்களுக்கும் தேவனுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தராக சேவை செய்திருக்க வேண்டும். அவனுடைய மருமகன் லோத்துக்காக தேவனுடைய தயவை வேண்டிக் கொண்டதினிமித்தம் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது (ஆதி. 18:22-33).

புதிய ஏற்பாட்டின் கீழ் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஆசாரியர்களாக, "ஆவிக்குரிய பலிகளை" செலுத்துகிறார்கள் (1 பேதுரு 2:5; காண்க வெளி. 1:6; 5:10). "பரிசுத்தவான்களாக" எல்லா கிறிஸ்தவர்களும் சமமானவர்களாக இருக்கிறார்கள், ஒருவனும் மற்றவர்களை விட உயர்ந்தவன் அல்ல. தேவனுடைய பார்வையில் ஒரு பெரிய பணிவிடை செய்வது மட்டுமே ஒருவனை உயர்ந்தவனாகச் செய்ய முடியும் (மத். 20:25-28). நாம் ஆசாரியர்களாக இருந்த போதிலும், நம்முடைய ஜெபங்களுக்கு அதிகமான பலனளிப்பதற்காக நம்முடைய பெரிய மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் உதவி நமக்கு தேவைப்படுகிறது (எபி. 4:14-16, 7:25).

## மெல்கிசேதேக்கின் முறைமையின்படி
## கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் (7:11-22)

**[11]அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர
ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப்
பெற்றார்கள்; அந்த ஆசாரியமுறைமையினாலே பூரணப்படுதல்
உண்டாயிருக்குமானால், ஆரோனுடைய முறைமையின்படி
அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி
அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?
[12]ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும்
மாற்றப்படவேண்டியதாகும். [13]இவைகள் எவரைக்குறித்துச்
சொல்லப்பட்டிருக்கிறதோ. அவர் வேறொரு
கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில்
ஒருவனாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே. [14]நம்முடைய
கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது
பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தாரைக்குறித்து மோசே
ஆசாரியத்துவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.
[15]அல்லாமலும், மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர்
எழும்புகிறார் என்று சொல்லியிருப்பதினால், மேற்சொல்லியது மிகவும்
பிரசித்தமாய் விளங்குகிறது. [16]அவர் மாம்ச சம்பந்தமான
கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல்,
[17]“மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும்
ஆசாரியராயிருக்கிறீர்” என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத
ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். [18]முந்தின
கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம்
மாற்றப்பட்டது. [19]நியாயப்பிரமாணமானது ஒன்றையும்
பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை
வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே
தேவனிடத்தில் சேருகிறோம். [20]அன்றியும், அவர்கள் ஆணையில்லாமல்
ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ: “நீர் மெல்கிசேதேக்கின்
முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று
கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார்” என்று
தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார்.
[21]ஆனதால், இயேசுவானவர் ஆணையின்படியே
ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ, [22]அவ்வளவு
விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்.**

இயேசு ஒரு தவறான வம்சாவளியைக் கொண்டிருப்பதால், அவர் ஒரு ஆசாரியராக இருக்க முடியாது என்ற அந்த ஆட்சேபனைக்குப் பதிலாக எபிரெயர் 7:11-22 எழுதப்பட்டிருக்கலாம். தெய்வீக

உத்வேகத்தால் உந்தப்பட்டு, எபிரெயர் எழுத்தாளர் தீர்க்கதரிசனமான ஏட்டுரைப் பகுதியான ஒரு புதிய ஆசாரியத்துவம் புதிய உடன்படிக்கையின் பாகமாக இருக்கும் என்பதைப் பயன்படுத்தினார்: சங்கீதம் 110:4. முதல் நூற்றாண்டு வாசகர்கள் பழைய ஆசாரியத்துவத்துடன் புதிய ஆசாரியத்துவமும் நடைமுறையில் இருக்கலாம் என்று நினைத்திருக்கலாம்; எபிரெயர் எழுதப்பட்ட வரை பழைய ஆசாரியத்துவத்தை கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தால் மாற்ற முடியும் என்று அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம்.

**வசனங்கள் 11, 12. ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்கிறது** என்ற கருத்து (வசனம் 12) கிறிஸ்தவத்தை நோக்கி பல யூதர்கள் மத்தியில் பெரும் பகைமையை உருவாக்கியது. நீண்ட காலமாக மதிக்கப்பட்ட **நியாயப்பிரமாணத்தை** மாற்றுவதை ஏற்றுக்கொள்வது என்பது அவர்கள் தாங்குவதற்கு அதிகமாக இருந்தது.

புதிய ஆசாரியத்துவம் பழையதை மாற்றுவதோடு, பழையது செய்யமுடியாததை அளிப்பதாக இருக்கும் - **பூரணப்படுதல்** (வசனம் 11). அத்தகைய பரிபூரணம், மனிதன் கிறிஸ்துவின் மூலமாக தேவனிடம் அணுகல் பெறுவதை உள்ளடக்கியது. இங்கே, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் பிரதான அம்சத்தைக் காண்கிறோம்: தேவனிடம் செல்வதற்கு வேறு வழி இல்லை (யோவான் 14:6).

“பரிபூரணம்” (τελείωσις, *டெலயோசிஸ்*) என்பது ஒரு நிறைவைக் குறிக்கிறது - தேடி, நிறைவேற்றப்பட்ட ஒரு முடிவு, பழைய உடன்படிக்கையில் காணப்படாத ஒரு பரிபூரணம். யூத மக்கள் லேவிய ஆசாரியத்துவத்தின் மூலம் பரிபூரணத்தை அடையலாம் எனவே அவசியமாக இருந்தது என்று நம்பினர். உண்மையில், நியாயப்பிரமாணம் **லேவிய ஆசாரியத்துவத்தை** அஸ்திவாரமாகக் கொண்டிருந்தது. பழைய ஏற்பாட்டு பலி செலுத்தும் முறையைப் பற்றிய யோசனை தவறாக புரிந்து கொள்ளப்பட்டது என்பதை நமது உரை காட்டுகிறது - நியாயப்பிரமாணத்தின் கீழ் செய்யப்படும் பலியினால் “காளைகள் மற்றும் ஆட்டுக்கடாக்களின் இரத்தம்” செலுத்துவதன் மூலம் பாவங்களை நிவிர்த்தி செய்ய முடியாது (10:4).

“பரிபூரணம்” என்பது பாவமற்ற பரிபூரணத்தை அர்த்தப்படுத்துவது அல்லது பாவம் செய்ய விரும்பும் அனைத்து ஆசைகளையும் மேற்கொள்வது என்பது இல்லை, ஆனால் முழுவதுமாக தண்டனை வழங்காமல் விட்டு பாவத்தை மன்னித்தல் என்று தெளிவாகத் தெரிகிறது. லேவிய முறைமை மூலம் இரட்சிப்பு கிடைத்தால், தாவீதின் காலத்தில் தேவன் எதற்காக மற்றொரு முறைமை ஆசாரியன் எழும்புவான் என்று கூறினார் (பார்க்கவும் சங். 110:4)? இது யூத ஆசாரியத்துவத்தில் அபூரணத்தைக் காட்டியது. ஒரு புதிய ஆசாரியத்துவத்தின் கருத்து யூத மதத்தின் முக்கிய நம்பிக்கைக்கு ஒரு அடியாக இருந்தது! “ஆசாரியத்துவத்தைப் பற்றிய பிரமாணங்கள்

நிரந்தரமாக செல்லத்தகு நிலையில் இருந்தன” என்று மக்கள் கருதினர்.[21]

அதைப்போல பவுல் நியாயப்பிரமாணத்தைப் பற்றி, அது உயிரைக் கொடுக்க முடியாது என்று குறிப்பிட்டார் (கலா. 3:21; காண்க 2:21). உண்மையில், இஸ்ரவேலின் வரலாற்றில் மிக நீதியுள்ள மக்கள் கூட தங்களைத் தாங்களே பூரணமுள்ளவர்களாகச் செய்ய முடியாது (எபி. 11:40). இந்த பிரச்சினைக்கு கிறிஸ்துதான் ஒரே பதில் (ரோமர் 7:7-25). இந்த சூழ்நிலைக்கு நியாயப்பிரமாணத்திற்குள் எந்தவொரு தீர்வும் இல்லை, ஏனென்றால் அதன் பொறுப்பு பாவத்திலிருந்து விடுதலை அளிப்பதைக் காட்டிலும் பாவத்தின் விழிப்புணர்வை உருவாக்குவதாக இருந்தது (கலா. 3:19).

மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து லேவிய ஆசாரியத்துவம் என்பதைப் பிரிக்க முடியாததால், மற்றொன்றையும் கடுமையாக பாதிக்காத வகையில் ஒன்றை மாற்ற முடியாது. நியாயப்பிரமாணத்திற்கு ஆசாரியத்துவம் தேவைப்பட்டது; “[ஆசாரியத்துவம்] இல்லாமல் நியாயப்பிரமாணம் செயல்படமுடியாது.”[22] உண்மையில், லேவியர் ஆசாரியத்துவத்தின் அடிப்படையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டுள்ளது (வசனம் 11), ஏனென்றால் சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்னால் ஆசாரியத்துவம் நிறுவப்பட்டது.

ஒரு மனித நிலைப்பாட்டிலிருந்து, தேவன் தன்னுடைய பிரமாணத்தை மாற்றிக்கொண்டு, வேறொரு ஆசாரியத்துவம் உள்ள மற்றொரு முறை வர அனுமதிக்கலாம் என்று தோன்றலாம். எனினும், தேவனுடைய வழி வசனம் 14 இல் காணப்படுகிறது. புதிய ஆசாரியத்துவத்திற்கு புதிய பிரமாணம் அவசியப்படுகிறது. ஆசாரியத்துவம் நியாயப்பிரமாணத்திற்கு அஸ்திவாரமாகவும் மேற்கட்டுமானமாகவும் இருப்பதால் இரண்டும் ஒன்றாக நிற்க வேண்டும் அல்லது வீழ வேண்டும் (வசனம் 12). இது யூத மதமும் அதன் பகுதி சார்ந்த அமைப்பும் வெளியேறியதைப் பற்றி, புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட தெளிவான விளக்கமாகும். சபையின் தொடக்கத்தில் இருந்து நியாயசங்கத்தின் குற்றச்சாட்டு அங்கீகரிக்கப்பட்டது போலவே அதன் தாக்கமும் வெளிப்படையாக இருந்தது: “எப்படியென்றால் நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம் என்றார்கள்” (அப். 6:14). நியாயப்பிரமாணத்தின் நடைமுறை மாறவேண்டும். ஆசாரியர்களில் அநேகர் விசுவாசிகளானபோது (அப். 6:7), சுவிசேஷத்தின் இந்த முதன்மையான உண்மையை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு சிரமமாக இருந்திருக்க வேண்டும்.

இந்த மாற்றத்தில் உள்ளடங்கியது எது? பத்து கற்பனைகளை

அல்லாமல், இனிமேல் ஆசாரியரின் சடங்கு மற்றும் பலியிடுதல் போன்ற புற ஆசாரங்களைக் கடைப்பிடிக்க அவசியம் இல்லை. அவர்கள் "ஒழுக்கநெறி" பிரமாணங்களையும் "புற ஆசார சடங்கு" பிரமாணங்களையும் வேறுபடுத்த முயன்று பிந்தையது நீக்கப்பட்டாலும் முந்தையது நீக்கப்படவில்லை என்று கூறினார்கள். நியாயப்பிரமாணம் ஓரளவு அகற்றப்பட்டு, மீதமுள்ளதை அப்படியே விட்டு விடலாம் என்ற யோசனை வேதாகமத்தில் எந்த ஆதாரத்தையும் கொண்டிருக்கவில்லை. வேதவாக்கியங்கள் அல்லது ஆரம்பகால சபை நியாயப்பிரமாணங்களை ஒழுக்கம், சடங்குகள் மற்றும் நீதித்துறை ஆகிய பிரிவுகளாக பிரிக்கவில்லை. "ஒழுக்கநெறி மற்றும் புற ஆசார சடங்குகளுக்கு இடையேயான வேறுபாடு கிறிஸ்தவ இறையியலாளர்களால் வடிவமைக்கப்பட்ட ஒன்று, நியாயப்பிரமாணம் முழுவதையும் தேவனுடைய சித்தமாக ஏற்றுக்கொண்டவர்களாலோ புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களாலோ அல்ல" என்று எஃப். எஃப். புரூஸ் சரியாகக் கூறினார்.[23] சில நேரங்களில் வேதவாக்கியங்கள் சங்கீதத்தை "நியாயப்பிரமாணத்தின்" பாகமாகக் குறிக்கின்றன (யோவான் 10:34; பார்க்கவும் சங். 82:6). நியாயப்பிரமாணத்தின் பகுதிகள் வெறுமனே புற ஆசார சடங்கு என வகைப்படுத்தப்படலாம். ஆனால் அந்த பகுதி மட்டுமே அகற்றப்பட்டது, மற்றவை அல்ல என்று ஒருவர் கூறக்கூடாது. "இந்த முழு நிருபத்திலும் 'நியாயப்பிரமாணம்' என்ற சொற்றொடரை மோசேயின் பொதுவான பிரமாணத்தில் இருந்து வேறுபடுத்தும் அர்த்தத்தில், மிகச்சிறிதளவு யோசனை ஒரு தடவை கூட இல்லை"[24] என்று ஜேம்ஸ் பர்டன் காஃப்மேன் குறிப்பிட்டார். **நியாயப்பிரமாணத்தின் மாற்றம்** நிச்சயமாக மோசேயின் முறைமைக்குப் பொருந்துகிறது.

7:12 முதல், நியாயப்பிரமாணம் கிறிஸ்துவில் மாற்றப்பட்டது அல்லது நீக்கப்பட்டது (காண்க 7:18; 10:9) என்று எபிரெயர் மூன்று முறை கூறுகிறது. யூத கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தினின்று "விடுதலையாகி" (வசனம் 6) இச்சைக்கு எதிரான பிரமாணம் உட்பட (வசனம் 7) அதற்கு "மரித்தவர்களானார்கள்" (வசனம் 4). அந்த குறிப்பிட்ட பிரமாணம் புற ஆசார சடங்கை விட அதிக ஒழுக்கநெறி உள்ளதாக இருந்தது; அது பத்து கட்டளைகளில் ஒரு பகுதியாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. கிறிஸ்து அவருடைய சிலுவையின்மேல் ஆணியடித்த கட்டளைகளிலுள்ள அந்த விஷயங்களுடன் ஓய்வு நாள் ஆசரிப்பையும் பவுல் சேர்த்துக் கொண்டான் (கொலோ. 2:14-17). "மரணத்திற்கேதுவான ஊழியம்" கற்களில் பதிக்கப்பட்டிருந்த கட்டளைகளையும் உள்ளடக்கியது (2 கொரி. 3:1-11). இயேசு அதன் அனைத்துத் தேவைகளையும் சரியான விதத்தில் கடைப்பிடித்து நிறைவேற்றியதன் மூலம் நியாயப்பிரமாணம் முழுவதும் அகற்றப்பட்டது (பார்க்கவும் மத். 5:17, 18).

**வசனம் 13.** இயேசுவோ அல்லது வேறு **கோத்திரத்தைச்** சேர்ந்த ஒரு ஆசாரியனால் கொடுக்கப்பட்ட பலியோ பாவத்திற்கான பலியாக இருக்க முடியாது என்று பரிசேயர்களும் யூதேயர்களும் வாதிட்டிருக்கலாம். லேவியின் கோத்திரத்தினர் மட்டுமே மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆசாரியர்களாக பணியாற்ற முடியும், ஆரோனின் குடும்பத்தார் தவிர மற்றவர்கள் பிரதான ஆசாரியர்களாக ஊழியம் செய்ய முடியாது. இயேசு ஆசாரிய கோத்திரம் அல்லாமல் ராஜ கோத்திரமான யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதை எல்லாரும் பொதுவாக அறிந்திருந்தனர். தேவாலயம் அழிக்கப்படுவதற்கு முன்பு (கி.பி. 70), அத்தகைய பதிவுகள் அனைவருக்கும் கிடைத்தன மற்றும் யூத எதிர்ப்பாளர்களால் மறுக்க முடியாதவை. பின்னர், இயேசுவின் தாவீதின் வம்சத்தை மறுதலிப்பதற்கான எந்த முயற்சியும் முதல் நூற்றாண்டில் செய்யப்படவில்லை என்பதாக நாம் கருதலாம். இயேசு தாவீதின் நகரமாகிய பெத்லகேமிலே பிறப்பார் என்று இந்த வம்சத்தை மத்தேயு 2:5, 6 சுட்டிக் காட்டுகிறது. லூக்கா 3:23-31 மற்றும் மத்தேயு 1:6-16 இல் உள்ள வம்ச வரலாறுகள் அவர் தாவீதின் குமாரன் என்று காண்பிக்கிறது, மற்றும் வெளிப்படுத்தின சுவிசேஷம் 5:5 அவர் "தாவீதின் வேருமானவர்" என்று குறிப்பிடுகிறது. அவர் யோசேப்பின் வளர்ப்பு மகன் என்பதாக மத்தேயு குறிப்பிடலாம், அதே சமயம் லூக்கா மரியாள் வழியான பரம்பரையைக் குறிப்பிடுகிறார். யோசேப்பு சில சமயங்களில் இயேசுவின் "வளர்ப்பு தந்தை" என்று அழைக்கப்படுகிறான். மரியாளின் வரலாறு தெரிந்த அனைவராலும் யோசேப்பின் தத்தெடுத்த மகனாக இயேசு எண்ணப்பட்டார். சந்தேகமின்றி, யோசேப்பு இயேசுவின் "தத்தெடுத்த" தந்தையாக இருப்பதை சிறந்த பெருமையாக எடுத்துக் கொண்டான். இருப்பினும், "தாவீதின் குமாரன்" என்ற பெயரில் ராஜ பரம்பரை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.[25]

**வசனம் 14. பிரசித்தமாயிருக்கிறது** என்பது "இது முற்றிலும் தெளிவாக உள்ளது," அல்லது "அனைவருக்கும் தெரியும்" (ஜே.பி.) என்று பொருள் தருகிறது. "இது வரலாறு பற்றிய விஷயம்" என்று பிலிப்பு பொழிபபுரையாற்றினார். ASV வெளிப்பாட்டை பயன்படுத்த, இந்த "தெளிவான" உண்மை, கிறிஸ்து "யூதா கோத்திரத்தில் இருந்து வந்தார்" என்பதாகும். "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி … செழிக்கும்" (ஏசாயா 11:1), என்ற தீர்க்கதரிசனத்தைப் பற்றியும், கர்த்தர் "எழும்பப்பண்ணுகிற" தாவீதின் "நீதியுள்ள கிளை" (எரே. 23:5, 6) என்ற யோசனை பற்றியும் இங்கே ஒரு கூற்று இருக்கலாம். "இதன் விளைவாக, நம்முடைய கர்த்தர் யூதாவிலிருந்து *எழுந்தருளினார்* என்னும் கூற்று ஒரு தெளிவான மீட்பாளரின் தாத்பரியத்தை கொண்டிருக்கிறது."[26] இங்கே முழு காரண ஆய்வும்

சங்கீதம் 110:4-ல் சுட்டிக்காட்டப்பட்ட வேறொரு ஆசாரிய முறைமையின் அடிப்படையில் உள்ளது, அந்த முன்னறிவிப்பை நிறைவேற்றிய ஒருவரே சங்கீதம் 110:1 இல் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார அழைக்கப்பட்டவரும் ஆவார். "நமது ஆசிரியரின் வாதத்திறமை," "இயேசுவின் ஆசாரியத்துவ சான்றுகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன" என்பதைக் காண்பிக்கிறது.[27]

இயேசு பழைய உடன்படிக்கையின் கீழ் ஒரு ஆசாரியராக இருக்க முடியாது என்று கூறுவதற்கு காரணம் **யூதாவில் இருந்து வந்த ஆசாரியர்களைப் பற்றி மோசே எதுவும் பேசவில்லை**. "'யூதாவிலிருந்து ஆசாரியர்களை எடுக்க வேண்டாம்' என்று தேவன் கூறவில்லை என்று கூறுவதன் மூலம் ஒருவர் தேவனுடைய மௌனத்தைக் கருத்தில் கொள்ளக் கூடாது, ஆனால் நிச்சயமாக அவர் கோத்திர தொடர்பைக் கவனிக்காமல் அவரது குமாரனுக்குச் சிறப்பான நடத்துதலைக் கொடுத்து, அவர் அங்கிகரிக்கப்பட்ட ஆசாரிய கோத்திரத்திலிருந்து வரவில்லை என்றாலும், அவர் அவரை ஒரு ஆசாரியனாக ஆக்குவார்" என்று இவ்வாறாக ஆசிரியர் விளக்கினார். இயேசு ஒரு லேவியன் அல்ல; ஆனால் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியதன் மூலம் அவர் பழைய சடங்குகளால் கட்டுப்படுத்தப்படவில்லை.

**வசனம் 15. இன்னும் தெளிவாக இருப்பது** என்ன? இந்த ஐந்து வேறு கருத்துக்களை வழங்கிய பின்னர், ராபர்ட் மில்லிகன் தனது சொந்த கருத்தை வெளிப்படுத்தினார். இந்த குறிப்பு 7:11-22 இன் முழுமையான பகுதிக்கான சுருக்கமாக பின்வருமாறு இருக்கலாம்: "இரண்டு லேவிய முறைமை ஆசாரியத்துவமும் அதைக் குறிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமும் நீக்கப்பட ஆசாரியத்துவத்தில் அத்தகைய மாற்றம் ஏற்பட்டது."[28] தீர்க்கதரிசனம் மற்றொரு ஆசாரியத்துவத்தை முன்னறிவித்தது (சங். 110:4), இதனால் யூதர்களின் புரிதலைக் கொண்ட மக்களுக்கு நியாயப் பிரமாணத்தில் மாற்றம் வேண்டும் என்பது தெளிவானதாக்கப்பட்டது. எனினும், **புதிய ஆசாரியர் மெல்கிசேதேக்கின் சாயலில் இருந்தார்**. மெல்கிசேதேக்கு தேவனுடைய குமாரனைப் போல் இருந்தான், பதிவுகளின்படி, அவன் கிறிஸ்துவைப் போலவே என்றென்றைக்கும் ஆசாரியராக இருந்தான் (7:2, 3). எலியா யோவானுக்கு முன்னோடினவனாக இருந்தது போல மெல்கிசேதேக்கு இயேசுவுக்கு முன்னோடினவனாயிருந்தான். ஒவ்வொரு அத்தியாவசியமான வழியிலும், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தில் காணப்படும் வகையை இயேசு நிறைவேற்றினார்: "மெல்கிசேதேக்கால் முன்னறிவிக்கப்பட்ட *உண்மை* கிறிஸ்துவே ..."[29]

**வசனம் 16.** லேவியரின் ஆசாரியத்துவம் எந்த உயர்ந்த பண்பையும் சார்ந்து இருக்கவில்லை, ஆனால் அது ஒரு **சரீரப் பிரகாரமானத் தேவையைச்** சார்ந்தது மட்டுமே (இலக்கியரீதியாக, σάρκινος, *ஷார்கினாஸ்*, என்பதன் பொருள் "மாம்சமான," அல்லது "சரீரத்துடன்

தொடர்புடையதாகும்"). தேவைப்பாடு வம்சாவளியைச் சார்ந்திருந்தது; அது "பூமியின் கட்டுப்பாட்டு விதிகளின் (NEB) ஒரு முறைமை" ஆகும். பழைய முறைமை, ஆசாரியர்களின் வம்சாவளி, வாசஸ்தல இயல்பு மற்றும் மிருக பலி போன்ற மதத்தின் வெளிப்புறத்தைச் சம்பந்தப்படுத்தியதாக இருந்தது. அந்த வகையான முறைமை, உள்ளான ஆவிக்குரிய மனுஷனில் அதிகக் கவனம் செலுத்தும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் தன்மைக்கு மாறாக இருக்கிறது.

இயேசுவின் வல்லமையின் உரிமையும் அதிகாரத்தின் உரிமையும் "முடிவற்ற வாழ்க்கையை" (KJV), அல்லது **ஒரு அழிக்கமுடியாத வாழ்க்கையின் வல்லமையை** (NASB; RSV; ISV) அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர் ஒரு காலத்தில், நம்மைப் போன்று மனிதர்களால் கொல்ல முடிகிற ஒரு உடலில் இருந்ததால் அவர் நம் மீது அனுதாபம் கொள்ள முடிகிறது (2:14, 15; 4:15; 5:7, 8). இருப்பினும், அவருடைய ஆத்துமாவை அவர்களால் அழிக்க முடியவில்லை; அவரது உடல் கல்லறையில் இருந்தபோது மரித்தவர்களின் உலகில் அவர் வாழ்ந்தார்; மரணம் அவரைப் பற்றிக்கொள்ள முடியவில்லை (அப். 2:31). அவர் தேவன் முன் நமது பரிகாரியாகிய அவரது வலதுபாரிசத்தில் உட்கார்ந்துகொண்டு என்றென்றும் வாழ்கிறார் (சங். 110:1). அவர் அதிகாரபூர்வ உரிமையின் மூலம் மட்டுமல்லாமல், வல்லமையும் அதிகாரமும் கொண்ட ஒரு ஆசாரியர். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ. 2:9). தன் மூலம் தேவனிடம் வருகிறவர்களை அவர் "என்றென்றைக்கும்" அல்லது "முழுமையாக" இரட்சிக்கிற வல்லமை உடையவர் (KJV; ASV; NJKV) (7:25). லேவிய ஆசாரியத்துவத்தை நிறுவுவதற்கான கட்டளை புறம்பானதாகவும் அழிந்து போகிறதுமாக இருந்தது. இது எந்த நேரத்திலும் மாற்ற முடியும் என்பதற்குத் தேவன் ஆயத்தமாக இருந்தார். மாறாக, "கிறிஸ்துவின் வாழ்க்கை இயல்பானதாகவும் அழியாததாகவும் இருக்கிறது."[30]

**வசனம் 17.** வாசஸ்தலத்திலுள்ள பணிகள் ஐம்பது வயதைக் கடந்த ஒருவர் சேவை செய்ய முடியாத அளவு மிகவும் கடினமாக இருந்தது (எண். 4:2, 3), ஆனால் இது இயேசுவோடு அப்படி இல்லை என்று ஜேம்ஸ் மாக்னைட் குறிப்பிட்டார்.[31] கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தின் மேன்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. **அவரது சாட்சிக்குத்தக்கதாக** என்பது சாட்சிகள் வேதவாக்கியத்தின் அதிகாரத்திலிருந்து வந்தவை என்று பொருளாகும் ("சாட்சிபெற்ற"; 7:8; "சாட்சிசொல்லுகிற"; 10:15). தேவனுடைய பிரசன்னத்திற்கு மக்களை கொண்டு வருவதற்கான உண்மையான நோக்கத்தை அவருடைய ஆசாரியத்துவம் நிறைவேற்றியது. அது பரிபூரணமானது, நித்தியமானது, மாறாதது.

**வசனம் 18.** லேவியின் ஆசாரியத்துவத்தைப் பற்றிய விதிமுறைகளை மட்டுமே குறிக்க சிலர் **முந்தின கட்டளையை**

கட்டுப்படுத்துகிறார்கள். எனினும், ஆசாரியத்துவத்தை **ஒதுக்கி வைத்தல்** மோசேயின் முழு நியாயப்பிரமாணத்துடனும் பொருந்துகிறது. அதன் அனைத்து வெளிப்பாடு மற்றும் ஈர்க்கக்கூடிய சமயச்சடங்கு இருந்தும் கூட, பழைய உடன்படிக்கை முறையானது மனசாட்சியின் உண்மையான சமாதானத்தைக் கொடுக்க முடியவில்லை.[32] அதன் மிகப்பெரிய தோல்வி, வழிபடுபவர்களை தேவனிடம் கொண்டு வருவதில் இல்லை.[33] பாவத்திற்கு எதிராக கற்றுக்கொடுப்பதும் கிறிஸ்துவுக்கு நேராக மக்களை வழிநடத்துவதும் நியாயப்பிரமாணத்தின் தனிப்பட்ட நோக்கமாக இருந்தது (கலா. 3:24). "அக்கிரமங்களினிமித்தமாக" நியாயப்பிரமாணம் கூட்டப்பட்டு (கலா. 3:19) அதன் பரிசுத்தத்திற்கு மாறான பாவத்தின் தன்மையைக் காட்டும் நோக்கத்தை அடைந்தது (ரோமர் 7:12). நியாயப்பிரமாணம் குறைவற்றது (சங். 19:7), பாவம் இன்னதென்று அறிய யூதர்களை வெற்றிகரமாகக் கொண்டுவந்தது (ரோமர் 7:7). எனினும், "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்தது" (ரோமர் 8:3); பாவத்தை மேற்கொள்ள அல்லது அந்த பாவத்திலிருந்து விடுதலை பெற மனிதனை அனுமதிக்க முடியவில்லை.

**வசனம் 19.** பாவத்திலிருந்து வெற்றி பெறுவதும் விடுதலை அடைவதும் நியாயப்பிரமாணத்தினாலே அல்ல, கிறிஸ்துவினால் மட்டுமே வருகிறது. வேறுவிதமாகக் கூறினால், **நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை**. தனக்குள் தானே அது பூரணமாக இருந்தது, ஆனால் அது பாவத்திற்கு முழுமையான பாவநிவிர்த்தி செய்ய முடியாது என்பதால் அது மனிதனின் குறைபாடுகளுக்கு உகந்ததாக இருக்க முடியாது. பழைய உடன்படிக்கையில் நம்பிக்கை புதியதுடன் ஒப்பிட முடியாதது. பழையதில், மக்கள் மீட்பர் வருகையை எதிர்நோக்கி இருக்க மட்டுமே முடிந்தது. புதியதின் கீழ், நமக்காக என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் திரும்பிப் பார்த்து களிகூர முடியும். நியாயப்பிரமாணம் ஜீவனை அளித்து அல்லது பாவிகளை பரிபூரணமாகச் செய்திருந்தால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே (கலா. 2:21; 3:21). இது பாவத்திற்கு மேலாக ஒருவர் வாழ்வதற்குப் போதுமான அளவு தூண்ட அல்லது ஊக்குவிக்க முடியாத கட்டளைகளை நியாயப்பிரமாணம் உள்ளடக்கியுள்ளது.

மனந்திரும்புதலுடனும் நம்பிக்கையூட்டும் இருதயத்துடன், நியாயப்பிரமாணத்தின் கீழ், வழிபடும் ஒருவர் தன் காணிக்கையுடன் வரும்பொழுது, "இயேசுவின் மரணத்தை நினைவுகூர்ந்து அந்த விசுவாசியின் விசுவாசச் செயல், ஆபிரகாமைப் போலவே தேவனால் கிருபையோடு 'நீதியாக எண்ணப்படக்கூடும்.'"[34] பலி மட்டுமே போதுமானதாக இல்லை என்பதைப் பழைய ஏற்பாடு தெளிவு படுத்துகிறது (சங். 51:16, 17; பார்க்க ஆமோஸ் 5:21).

உண்மையிலேயே எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் மட்டும் ஆசீர்வதிக்கப்பட முடியும் (சங். 32:1, 2). பழைய உடன்படிக்கையின் கீழ் "பூரணப்படுத்தப்பட்ட" அந்தக் குறிக்கோளை, அவர்கள் மீட்கப்படும் பொருட்டு அவர்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்ற எதிர்பார்ப்புள்ள வழியில் மட்டும் அடைந்தார்கள் (எபி. 9:15). இரட்சிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு மக்களைப் பற்றி நாம் வேதவாக்கியங்களில் வாசிக்கும்போது, அவர்களின் தனிப்பட்ட நல்வாழ்வு அல்லது நீதியின் நற்பண்புகளால் அல்லாமல், கிருபையினால் விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டார்கள் என்று நாம் உணர வேண்டும். ஆபிரகாமின் விசுவாசத்தை "அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதி. 15:6) எனவே, நியாயப்பிரமாணத்தின் கீழ் "இரட்சிக்கப்பட்ட" அனைவருக்கும் அவ்வாறாக எண்ணப்பட்டது.

நியாயப்பிரமாணம் நம்முடைய "உபாத்தி" (παιδαγωγός, *பைடகொகாஸ்*) என்று கலாத்தியர் 3:24 இல் அழைக்கப்படுகிறது. இலக்கியரீதியாக, இந்த வார்த்தை ஒரு குழந்தை தனது உபாத்தியாக எடுத்த வேலைக்காரன் அல்லது அடிமையை குறிக்கிறது; நியாயப்பிரமாணம் நமது உபாத்தியாக, கிறிஸ்துவுக்கு நம்மை கொண்டு வந்தது.

புதிய உடன்படிக்கை பாவ இதயத்தைச் சுத்திகரிப்பதால், நாம் இப்போது **தேவனிடத்தில் சேருகிறோம்**. பழைய ஏற்பாட்டின் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்தபோது அவர்கள் தேவனிடத்தில் சேர்ந்தார்கள். ஜெபிக்கிற அல்லது தொழுகிற ஒவ்வொரு முறையும் நாம் அதைச் செய்கிறோம். இயேசுவின் இரத்தம் வழியாக இது எப்படி நிறைவேற்றப்படுகிறது என்று எபிரெயர் 10:19-22 காட்டுகிறது. அவரது இரத்த பலி உண்மையில் பழைய ஏற்பாட்டு பலிகளை உறுதிபடுத்தியது. நம்முடைய புதிய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து, தேவனிடத்தில் சேருகிற அதிக **நன்மையான நம்பிக்கையை** கொண்டு வந்தார். உண்மையில், அவரே நமது நம்பிக்கை (1 தீமோ. 1:1).

கிறிஸ்துவின் ஆசாரிய பலியின் மூலம் அவர் நமக்கு எதைச் செய்தார் என்பது எபிரெயரில் உள்ள கவனமாக இருக்கிறது. இந்த நிருபத்தின் பிரதான அம்சம் நம்பிக்கையாகும் (பார்க்க 3:6; 6:11, 18, 19; 7:19; 10:23). நாம் தேவனிடத்தில் சேர்ந்த பொழுது இயேசுவில் காணப்படும் சமாதானம், விசுவாசத்தால் நியாயப்படுத்தப் படாதவர்களால் வைத்திருக்கப்படவில்லை (ரோமர் 5:1, 2). ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் பொழுது, விசுவாசம் நம்முடைய பாவங்களைச் சுத்திகரிக்கிறது (அப். 22:16). இந்த வழியில் சுத்திகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே தீய மனச்சாட்சியை விடுத்து, "நம்பிக்கையோடு கிருபையின் சிங்காசனத்திற்கு" வரமுடியும் (4:16).

**வசனம் 20.** ஏன் கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் லேவிய

ஆசாரியத்துவத்திற்கு மேலானது? மறு மொழியாக இப்புத்தகத்தின் மையப்பொருளின் பெரும்பகுதியுடன் இந்தக் கேள்விக்கு இந்த பகுதி பதிலளிக்கிறது. இன்று நமக்கு இது முக்கியமா? ஆம், ஏனென்றால் கிறிஸ்துவுக்கு வெளியே உள்ளவர்கள் என்றென்றும் இழக்கப்படுகிறார்கள். இன்னும் தங்கள் பாவங்களில் உள்ளவர்கள் கிறிஸ்து எங்கேயோ அங்கு செல்ல முடியாது (யோவான் 8:21, 24). பிரதான ஆசாரியராக கிறிஸ்துவின் பணி மட்டுமே அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

தேவன் ஒரு "சிறந்த உடன்படிக்கையை" செய்து அவ்வாறாக அவர் **ஒரு ஆணையோடே** உறுதி செய்தார். தேவன் "ஆணையிட்டவைகளின் நிச்சயத்தையும் மாற்ற முடியாமையையும் உறுதிப்படுத்துவதற்கு" ஒரு ஆணையை அரிதாக மட்டுமே பயன்படுத்தினார்,[35] (1) ஆபிரகாமுக்கு, பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதம் அவன் வழியாகச் செல்ல (ஆதி. 22:16-18); (2) கலகம் செய்த இஸ்ரவேலர்களுக்கு, அவர்கள் தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை (உபா. 1:34, 35); (3) மோசேக்கு, அவன் கானானுக்குள் பிரவேசிப்பதில்லை (உபா. 4:21); மேலும் தாவீதுக்கு, அவனுடைய வித்துவும் சிங்காசனமும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் (சங். 89:3, 4) போன்ற பழைய ஏற்பாட்டில் உள்ள முக்கிய ஆணைகளை தேவன் ஆணையிட்டார்.

அவர் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற உறுதியான நிச்சயத்தைத் தேவன் ஒரு ஆணையை பயன்படுத்துவது செய்கிறது. பழைய உடன்படிக்கை ஆசாரியத்துவம் நிறுவப்பட்டதில் ஆணையால் முத்திரிக்கப்படவில்லை. லேவிய ஆசாரியத்துவத்திற்கு அங்கீகரிப்புடன் தேவன் ஆணை எதுவும் செய்யவில்லை. தேவனின் நீண்ட பார்வைத் திட்டங்களுக்கு லேவி ஆசாரியத்துவம் தேவையில்லை என்பதால், அதை மாற்ற முடியும். ஆசாரியத்துவத்திற்கான பழைய உடன்படிக்கையுடனான பிரிக்க முடியாத இணைப்பால், ஆசாரியத்துவத்தை மாற்றியமைக்க முடியும் என்பதால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட முடியும்.

**வசனம் 21.** இந்த வசனம் வசனம் 17 இல் தவிர்க்கப்பட்ட சங்கீதம் 110:4-ன் முதல் பகுதியை மேற்கோள் காட்டுகிறது: **"என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார்.** கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் மெல்கிசேதேக்குடையதைப் போலவே இருக்கும் என்று தேவன் ஆணையிட்டார், பிரமாணத்தையும் ஆசாரியத்துவத்தையும் திருத்துவது பற்றிய ஆணையை இப்பொழுது கொண்டிருக்கிறோம், தேவன் "அவருடைய மனதை மாற்ற மாட்டார்." இரட்சிப்பையும் தேவனுக்காக தேவையான பரிந்துரையை அளிக்கிறதுமான இந்தப் புதிய ஆசாரியத்துவம் விட்டுச் செல்ல விருப்பப்படுகிற அதிகமான ஆவிக்குரிய மதிப்பு எதுவும் இல்லை.

தேவன் ஏதோ ஒன்றைக் கூறும்போது, அது நடந்து முடிந்ததாக இருக்கிறது. இயேசு ஒரு வார்த்தை கூறியபோது தூரத்தில் இருந்த ஒரு ரோமானிய நூற்றுக்கு அதிபதி குணமாக முடிந்தது என்று லூக்கா 7:6-10 விளக்குகிறது. இயேசுவைப் பற்றிய உண்மையை நூற்றுக்கு அதிபதி அறிந்து கொண்டதால், நம்முடைய கர்த்தர் அவனுடைய விசுவாசத்தை இஸ்ரவேலிலே தான் கண்டிருந்த மற்ற எதைப் பார்க்கிலும் வலுவானதாகக் கருதினார். இந்த மனிதன் இயேசுவின் வார்த்தையை தேவனுடையதாக ஒரே நிலைப்பாட்டில் வைத்தான். நாமும் அதே போல் செய்ய வேண்டும்.

தேவன் அவர் செய்ய ஆணையிட்டுக் கூறிய ஏதோவொன்றில் அவரது மனதை மாற்றமாட்டார், அதேசமயம் சில நேரங்களில் நிபந்தனையுடனான விஷயங்களில் அவர் தனது மனதை மாற்றியுள்ளார். கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்திற்கு அப்பால் ஒன்றுமில்லை; அதை எதுவும் மாற்ற முடியாது. அவரது ஆசாரியத்துவம் "என்றென்றைக்கும்" என்று எபிரெயர் 7 மூன்று முறை கூறுகிறது (வசனங்கள் 3, 17, 21). இது தேவ கிருபையின் இறுதி யுகமாகும்; ஒரு "காலம்" என கணக்கிட முடியாத நித்தியத்தைத் தவிர, வேறு எந்தக்காலமும் அதற்கு அப்பால் இல்லை. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு அப்பால் ஆயிர வருட காலத்திற்கு எந்த இடமும் இல்லை. தேவனுடைய சத்தியத்தின் காரணமாக நாம் இதை இரட்டிப்பாக நம்பலாம்.

**வசனம் 22.** எபிரெயர்களின் கருத்தின் ஒரு பகுதியாக இந்த வசனம் காணப்படுகிறது: **இயேசுவானவர் … விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்.** "பிணையம்" அல்லது "உறுதி" (ἔγγυος, *எங்குவாஸ்*) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறு எங்கும் காணப்படவில்லை. பண்டைய சட்ட ஆவணங்களில் ஒரு உறுதிமொழி என்ற பொருளில் அல்லது ஜாமீன் குறிப்பில் அல்லது ஜாமீன் வழங்கியவர் ஆகியவற்றில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது. ஒரு திருமணத்தின் ஏற்பாட்டில் ஒரு மகள் வரதட்சணை கொடுக்கும் உத்தரவாதத்திற்கும் இது பொருந்தும்.[36] பாரம்பரிய கிரேக்க மொழியில் *எங்குவாஸ்* என்பது சட்டபூர்வமான அர்ப்பணிப்பு நடத்தப்படும் என்று பிணையம் அளிக்கும் ஒருவரைக் குறிக்கும்.

இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், நம்முடைய முழு மன்னிப்புக்கும் நித்திய இரட்சிப்புக்கும் அவர் பிணையம் அளித்திருக்கிறார். நம்முடைய இரட்சிப்பு கிறிஸ்துவிற்குள்ளும் அவர் மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; அவர் நம்முடைய உறுதி. கிறிஸ்து நமக்காக மீட்பின் கிரயத்தைச் செலுத்தி இருப்பதால் நாம் மீட்கப்படுகிறோம் என்று நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த நிலையில் நமது நம்பிக்கை விசுவாசத்தின் மூலமாகிறது. எனினும், ஆரம்ப உத்தரவாதம் தேவனின் உறுதிமொழி மூலம் வழங்கப்பட்டது

(வசனம் 21). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவில் ஒரு உத்தரவாதத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்ற அறிக்கை, அனேகமாக எபிரெய சமூகத்திய உறுப்பினர்கள் மிகக்குறைவான உத்தரவாதம் அளிப்பதும் இரட்சிப்பைப் பெறுவதில் பயனற்றதுமான தாழ்வான சிலவற்றிற்கு - நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பி போகக்கூடும் என்ற ஆசிரியரின் கவலையைப் பிரதிபலிக்கிறது.

கிறிஸ்து "விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளி" ஆனார். "உடன்படிக்கை" (διαθήκη, *டியாதேகெ*) என்னும் வார்த்தை முதன்முதலாக நிருபத்தில் இங்கு பயன்படுத்தப்படுகிறது, ஆனால் அது பின்வருகிற விவாதத்தின் மையப் பகுதியாக செயல்படுகிறது. (9:16, 17-ல் உள்ள "உடன்படிக்கை" என்ற வார்த்தையின் ஆய்வுகளைப் பார்க்கவும்.) எபிரெயர் "உடன்படிக்கையின் நிருபம்" என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இந்த உரை "அடுத்த இரண்டு அத்தியாயங்களில் வருகிறது என்ன என்ற ஒரு குறிப்பைத் தந்து, இனி இல்லை என்று கூறுகிறது."[37] அது உண்மையிலேயே "சிறந்தது" - இது புதிய ஏற்பாட்டில் காணப்படும் பதினாறில் பதின்மூன்று முறை பயன்படுகிற எபிரெயரின் ஒரு பிரதான சிந்தனை. 8:8-ல் "புதிய உடன்படிக்கை" என்பதுதான் "சிறந்த உடன்படிக்கை" ஆகும்.

## பரிபூரணமும் நிரந்தரமுமான கிறிஸ்துவின் ஆசாரியப் பணி (7:23-28)

**[23]அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக்கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். [24]இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். [25]மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். [26]பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். [27]அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார். [28]நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு**

**உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது.**

7:22-28-ல் உள்ள பெரிய ஆசாரியத்துவ உரைப்பகுதியில் கிறிஸ்துவின் மூன்று உருவகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் நமது "ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளி" என்று நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம் (வசனம் 22). அவர் நமது நித்திய ஆசாரியராகவும், நம்முடைய பயனுள்ள பலியாகவும் இருக்கிறார் என்றும் நாம் காண்கிறோம் (வசனங்கள் 26, 27). கிறிஸ்துவின் ஆசாரிய பணியும் பலியும் அவரது "நிரந்தர சாதனை, வரம்பற்ற வல்லமை, தற்போதைய ஊழியம், பாவமற்ற தன்மை மற்றும் பழுதற்ற பலி."[38] என்று ரேமண்ட் பிரவுன் குறிப்பிட்டார்.

**வசனங்கள் 23, 24. ஆசாரியர்கள்** எபிரெயர் நிருபம் எழுதிய காலத்தில் தேவாலயத்தில் கி.பி. 70 இல் எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்னால் ஊழியம் செய்து வந்தனர், தேவாலயம் அழிக்கப்பட்டபோது, அவர்களுடைய பலி முடிவிற்கு வந்தது. ஆரோனின் குடும்பத்தார் சரியான பிரதான ஆசாரியர்களாக ஊழியம் செய்த, வெகுகாலத்திற்கு முன்பான சரியான நேரத்தைப் பற்றி ஆசிரியர் முதன்மையாக பேசியிருக்கலாம். இந்த சபைப் பற்றி எபிரெயரில் குறிப்பாக குறிப்பிடப்படவில்லை என்பதற்கு இது ஒரு காரணமாக இருக்கலாம்.

**மரணம்** அல்லது அலுவலகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட காலம் காரணமாக எண்ணற்ற அல்லது **பெரிய எண்ணிக்கையில்** பிரதான ஆசாரியர்கள் முறைமையின்படி ஊழியம் செய்தார்கள், அதேசமயம், சபையில் எல்லா காலத்துக்கும் ஒரே பிரதான ஆசாரியரை நாம் கொண்டிருக்கிறோம். ஜோசிஃபஸ் கூறியபடி, எருசலேம் வீழ்ச்சி அடைவதற்கு முன்பு எண்பத்து மூன்று பிரதான ஆசாரியர்கள் இருந்தனர்.[39] எந்த ஒரு சமயத்திலும் மொத்தம் ஆயிரத்து ஐநூறு ஆசாரியர்களாக பல ஆசாரியர்கள் ஊழியம் செய்தார்கள்.[40] ஒவ்வொரு ஆசாரியனைப் பற்றிய குறிப்புகளும் "அவன் மரித்து விட்டான்" போன்ற ஒரு சொற்றொடருடன் முடிவடையும். மோசே ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி, ஆரோன் உடுத்திருந்த ஆசாரிய வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான்; அப்பொழுது ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே மரித்தான்; இவ்வாறு தொடர்ச்சியாக சென்றது, முந்தைய ஆசாரியர்கள் மரிக்கும் போது ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது. கிறிஸ்துவின் மேன்மையான மகா பிரதான ஆசாரியத்துவத்தின் நித்திய இயல்பு, **என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே** (வசனம் 24) என்ற வார்த்தைகளில் காணப்படுகிறது. ஆசாரியனாக அவருடைய காலம் ஒருபோதும் முடிவடைவதில்லை. சங்கீதம் 110:4 இல் உள்ள தீர்க்கதரிசனம்

எபிரெயர் 7:21 இல் மீண்டும் கூறப்பட்டுள்ளது: "நீர் என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் …" எந்தவொரு யூத பிரதான ஆசாரியனும் என்றென்றும் பிரதான ஆசாரியனாக இருக்க முடியாது - ஆனால் கிறிஸ்து இருக்கிறார் ஏனென்றால், அவர் மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டார், மீண்டும் மரிக்க மாட்டார்.

வசனம் 16 இரண்டு ஆசாரியத்துவங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை சுட்டிக்காட்டுகிறது, பூமிக்குரியதும் அல்லது "மாம்சத்திற்குரியதும்," ஆகிய ஒன்று, "அழியாத ஜீவனுக்குரிய வல்லமையுள்ளது" மற்றொன்று. வசனம் 23 மற்றொரு வேறுபட்ட பண்பில் கவனம் செலுத்துகிறது: ஒன்றாக இருக்கும் பல வசனங்கள். சுவிசேஷம் உறுதிசெய்யப்பட்டதும் அற்புதங்களின் காலம் முடிந்து விட்டாலும், கிறிஸ்து மற்ற அற்புதங்களைச் செய்து குணப்படுத்துவதன் மூலம், அவர் பூமியில் செலுத்தும் வல்லமை இன்னும் இருக்கிறது (காண்க 2:1-4). அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது கிறிஸ்துவின் அற்புதங்களைப் பற்றி கேட்கும்போது, போதுமானதாக இல்லாத ஆரம்பகால கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை பலப்படுத்தியிருக்க வேண்டும். "அந்த காலத்திலிருந்து கிறிஸ்து நமக்கு எதைச் செய்தார்?" என்று ஒருவேளை அவர்கள் ஆச்சரியப்படுவார்கள். அவரின் தற்போதைய வேண்டுதல் செய்யும் பணி (வசனம் 25) அவரது முந்தைய காணக்கூடிய அற்புதங்களைப் போலவே மதிப்புமிக்கது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

கிறிஸ்து **மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்** (வசனம் 24). "மாறிப்போகாத" (ἀπαράβατος, *அப்பராபாடோஸ்*), என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை "மாற்ற முடியாத" என்ற பொருள் கொண்டு ஆசாரியத்துவம் ஒருபோதும் மற்றவர்களுக்கு கொடுக்கப்பட முடியாது என்பதைத் தெரிவிக்கிறது.[41] இந்த கூற்றின் வெளிச்சத்தில் கிறிஸ்துவின் நிலைப்பாட்டை நிறுவியவர் அல்லது சில பிரிவுகளைச் சேர்ந்த "தீர்க்கதரிசி" ஒருவருக்கு கொடுக்க முடியும் என்று கற்பனைகூட செய்து பார்க்க முடியாதது.

**வசனம் 25.** எருசலேமில் கடைசி பிரதான ஆசாரியன் அந்த நிலைப்பாட்டில் செலோத்தேகளால் ஒரு கேலிக்கூத்தாக வைக்கப்பட்டான். அவன் பிரதான ஆசாரியத்துவத்தின் பொருள் என்னவென்று தெரியாத ஒரு தகுதியற்ற தனிமனிதன்[42] அந்த பிரதான ஆசாரியனின் பொருத்தம் அற்ற தன்மை கிறிஸ்துவுடைய **என்றென்றும் காப்பாற்றும்** திறனுக்கு மாறாக உள்ளது. அவருடைய மரணம் அவருடைய பிரதான ஆசாரியத்துவத்தை குறைக்கவில்லை, ஏனென்றால், அவர் மரித்தோரிடமிருந்து நித்திய காலமாக உயிர்த்தெழுப்பப்பட்டார். "மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" (ரோமர் 6:9). இயேசு கிறிஸ்து என்றென்றும்

நிலைத்திருக்கிற தனது பிரதான ஆசாரியத்துவத்தை வைத்திருக்கிறார், யாரும் அவருடைய இடத்தைப் பற்றிக் கொள்ள முடியாது.

கிறிஸ்து பகுதியாக இரட்சிக்க முடிகிறது, ஏனென்றால் அவர் நம்முடைய பிரதான ஆசாரியராக என்றென்றும் வாழ்கிறார். அவருடைய கடந்தகால வல்லமையின் செயல் விளக்கங்கள் இனி தெரிவதில்லை, ஆனால் அவர் இப்போது என்ன செய்கிறார் என்பது இப்பொழுதும் நித்தியத்திலும் வரம்பில்லா வல்லமையின் ஒரு செயல் விளக்கம். நமக்குத் **திறமையான**, வல்லமையுள்ள இரட்சகர் தேவை. அவர் கல்வாரியில் செய்த பலியினால், பாவத்திற்கான தண்டனையில் இருந்து கீழ்ப்படிதலுள்ளவர்களை காப்பாற்ற முடியும் (5:8, 9).

"இரட்சிக்க" என்ற வார்த்தை நிகழ் காலத்தில் உள்ளது; வேறு விதமாகக் கூறினால், அவர் தொடர்ந்து இரட்சிக்கிறார். அதுபோலவே, 1 கொரிந்தியர் 10:13 இல் சோதனையில் இருந்து தப்பிக் கொள்ளும் போக்கை (அல்லது "இரட்சிக்க") உண்டாக்க வல்லவர் என்று பவுல் கூறினான். அவர் அதை தேவதூதர்கள் மூலமாகச் செய்யலாம் (1:14), ஆனால் கிறிஸ்து அவர்கள் மூலமாக கிரியை செய்கிறார். அவரது வாழ்க்கை என்றென்றும் நிலைத்திருக்கிறபடியினாலும் அவரது பிரதான ஆசாரியத்துவ தன்மையினாலும், அவர் தொடர்ந்து அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களை பாவத்தின் பிடியில் இருந்து இரட்சிக்கிறார். கிறிஸ்தவர்களுக்கு இன்னும் "இரட்சிப்பு" அவசியமாகிறது.[43] முன்னர் கற்பனை செய்ய முடியாத வகையில் கிறிஸ்து நம்மை பிதாவுக்கு முன் நிறுத்த முடியும்: "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்" ஆக அவர் இருக்கிறார் (யூதா 24). அவர் நமக்காக வேண்டுதல் செய்வது, உதவி செய்வதற்கான ஒரு நிலையான ஆதாரமாக உள்ளது.

NASB மொழிபெயர்ப்பாளர்கள் "என்றென்றும்" என்ற வார்த்தையை (παντελής, *பான்டலெஸ்*), எந்த அளவிற்கு நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதை விவரிக்க தேர்ந்தெடுத்தனர், ஆனால் NJKV மற்றும் ASV "பூரணமானது" என்பதாகக் கொண்டிருக்கிறது. கிறிஸ்து பாதியிலேயே தமது கிரியையை கைவிடவில்லை, நமக்கு அவரது வல்லமை தேவைப்படுகிறவரை தொடர்கிறார். இதன் காரணமாக அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார். அவரது வேண்டுதல் செய்யும் கிரியை பவுலால் வலியுறுத்தப்பட்டது (ரோமர் 8:33, 34). நமக்கு இந்த பிரதான ஆசாரியர் தேவை ஏனென்றால், அவர் கூறியிருக்கிறார் "… என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6). கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்கிறவர் என்று கூறுவது வேதாகமத்தில் உள்ள மிகச் சிறந்த அறிக்கைகளின் மத்தியில் உள்ளது.

ரோமர் 8:33, 34 இன் வார்த்தைகள் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், சிங்காசனத்தில் வீற்றிருத்தல் மற்றும் வேண்டுதல் செய்தல் ஆகியவற்றிற்கு சாட்சியாக இருந்த ஆரம்ப கால கிறிஸ்தவர்களுடைய "விசுவாச அறிக்கை எதிரொலியின் அடையாளமாகும்"[44] என்று புரூஸ் நினைத்தார். நிச்சயமாக, பரலோகத்தில் நம்முடைய தேவைகளை கவனித்துக்கொள்ளும் அத்தகைய ஒரு நண்பர் உள்ளார் என்பதால் கிறிஸ்தவர்கள் பெருமை பாராட்ட முடியும். ஏசாயா 53:12 இல் இந்த வேலை முன்னறிவிக்கப்பட்டது. கிறிஸ்துவுக்குள் தேவனிடம் நெருங்கி வருபவர்களுக்கு அதிசயமான பெரும் ஆசீர்வாதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. லேவிய ஆசாரியர்கள் தங்கள் வேலையின் மூலம் ஏற்படும் இந்த சாத்தியத்தைப் பற்றி யோசித்திருக்க மாட்டார்கள். அங்கு சோர்வடைந்தவர்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத். 11:28-30), பிதாவாகிய தேவனிடத்திற்கு வழி திறக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது (யோவான் 14:6). வேறு எந்த வழியும் வழங்கப்படவில்லை.

**வேண்டுதல் செய்தல்** என்று மொழி பெயர்க்கப்பட்ட வார்த்தை (ἐντυγχάνω, *என்டுக்ச்சானோ*), இந்த நிருபத்தில் வேறு எங்கும் காணப்படவில்லை; ஆனால் ஆவியினாலும் கிறிஸ்துவினாலும் வேண்டுதல் செய்தல் சம்பந்தமாக பவுலால் உபயோகிக்கப்பட்டது (ரோமர் 8:26, 34). யோவான் 17:6-26 இல் இயேசு அப்போஸ்தலர்களுக்குச் செய்ததை இயேசு நமக்காக தொடர்ந்து செய்வார். வாய்விட்டுக் கூறத் தகுதி அற்ற புலம்பல்களை, வேண்டிக்கொள்ளும் தெய்வீக செய்தியாக மாற்றி, இதன் மூலம் தேவனுடைய பதிலை நமக்கு உறுதிப்படுத்துகிற ஆவியானவரின் செயலில் இருந்து சற்று வேறுபட்டது. பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன் பாவநிவாரண பலி செலுத்தும் பொழுது, தங்கள் பாவங்களுக்கான தண்டனை "தள்ளி வைக்கப்பட" கர்த்தரைப் பணிந்து கொள்ள வருகிறவர்களுக்காக அவர்களுடைய பலிகளுடன் தனது சொந்த வேண்டுதலைச் செய்வதற்கு இணையாக இது இருக்கலாம்.[45]

பவுலும் எபிரெயரின் ஆசிரியரும் கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்யும் பணியை சங்கீதம் 110 உடன் இணைத்தனர். அக்கிரமக்காரர்களுக்காக வேண்டிக்கொள்ளும் ஒருவர் என்று கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்ற கருத்திற்கு ஏசாயா 53:12-ம் ஒரு அடித்தளமாக இருப்பதாகத் தெரிகிறது.

**வசனங்கள் 26, 27.** அத்தகைய சூழ்நிலைக்கு ஏற்றாற் போல், முற்றிலும் பாவமில்லாமல் இருந்த ஒருவராகிய **பிரதான ஆசாரியன்** நமக்கு கொடுக்கப்படுவது பொருத்தமாக இருந்தது, அவர் **பரிசுத்தமாக** (ὅσιος, *ஹோசியஸ்*), அதாவது தேவபக்தி, பயபக்தி மற்றும் தேவனைப் பிரியப்படுத்துகிறவராக இருக்க வேண்டும்.[46] இந்த வார்த்தை

"உண்மையுடனும் கவனத்துடனும் தேவனுக்குத் தன்னுடைய கடமையை ஆற்றும் ஒரு மனிதனை எப்போதும் விவரிக்கிறது." [47] பழைய ஏற்பாட்டு ஆசாரியன் ஒருவன் பரிசுத்தமாக இருக்க வேண்டும் ஏனென்றால், அப்படிப்பட்ட மனிதர்கள் மட்டுமே ஆலயத்திற்குள் பிரவேசிக்க முடியும். அவன் வெறுமனே முறையான வழிபாட்டு நிகழ்ச்சியை செய்வதோடல்லாமல் இருதயத்தில் சுத்தமாக இருக்க வேண்டும். இயேசு பாவத்தின் மூலம் கறைப்படுத்தப்பட்டிராதவர், நாமும் அவ்வாறு இருக்க வேண்டும். பேதுருவும் பவுலும் இயேசுவைப் "பரிசுத்தர்" என்று அடையாளப்படுத்துவதில் சங்கீதம் 16:10 ஐக் குறிப்பிட்டனர் (அப். 2:27; 13:35). நமக்குத் தேவையான எல்லா தகுதிகளையும் அவர் பெற்றிருக்கிறார். கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும், ஆனால் நம்மைப் பரிசுத்தமாக்கி (எபி. 2:11) தெய்வீகமாகச் செய்கிற கிறிஸ்து மூலம் மட்டுமே நாம் அதை அடைய முடியும்.

மனிதனுடனான அவரது அனைத்து நடவடிக்கைகளிலும் நமது கர்த்தர் **களங்கமற்றவர்** (ἄκακος, *அககோஸ்*), அல்லது குற்றமற்றவர். பகைமை எண்ணம் அல்லது வெறுப்புணர்வு இல்லாத ஒரு வாழ்க்கையை இயேசு வாழ்ந்து காண்பித்தார்; அவர் அனைவரிடமும் அன்பும் இரக்கமும் காட்டினார். அவர் நன்மையானவைகளை மட்டுமே செய்தார். சபையில் இருந்து காசுக்காரர்களை விரட்டுகையில், நிச்சயமான நன்மையாக அவர் அதைச் "சுத்தப்படுத்திக்கொண்டிருந்தார்" அவரது நடவடிக்கை கட்டாயமாக அவர்களின் திருட்டுத்தனத்திற்கு கவனத்தை ஈர்த்தது (யோவான் 2:14, 15). ஒருவேளை அது சிலர் மனந்திரும்புவதற்கு ஏதுவாக இருந்திருக்கலாம்.

**மாசில்லாதவரும்** (ἀμίαντος, *அமியன்டோஸ்*) என்ற வார்த்தை எந்த விதமான அசுத்தமான நெறிமுறைகளையும் இயேசு கொண்டிருக்கவில்லை என்பதைக் கூறுகிறது. இந்த சொல்லை மாம்ச பிரகாரமான தூய்மைக்கு பயன்படுத்தலாம்; ஆசாரியர்கள் வெளிப்படையாக களங்கம் அற்றவர்களாக இருக்க வேண்டும். தூய்மையான நெறிமுறைகளைக் கொண்டிருப்பது எவ்வளவு முக்கியம்! மாசில்லாதவராக இருத்தல் என்பது அவர் லேவி கோத்திரத்தார் செய்ய வேண்டியதைப் போல சடங்கு கறைகளைத் தவிர்த்தார் என்பது மட்டுமல்ல, அவர் அசுத்தமான நெறிமுறைகளை உடையவராகவும் இருத்தல் கூடாது. ஆசாரியர்கள் பாவத்தினால் கறைபடுத்தப்பட்டு அதனால் புனிதத் தன்மையைக் கெடுத்தனர், ஆனால் கறை படியாமல் இருப்பது நமது இரட்சகருக்கு **பொருத்தமானதாக** இருந்தது. நமது வாழ்க்கையும் பாவிகளின் வாழ்க்கையில் இருந்து வேறுபட்டிருக்க வேண்டும்; சில நேரங்களில் நாம் இடம் சார்ந்தும் நெறிமுறை சார்ந்தும் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் (2 கொரி. 6:14-7:1).

இயேசு **பாவிகளிடம் இருந்து பிரிக்கப்பட்டிருந்தார்**, அதே நேரத்தில் அவரது "சகோதரர்கள்" உடன் அடையாளப்படுத்தப்பட்டவராக இருந்தார் (2:11-18). அவர் நமக்கு நெருக்கமாக இருக்கிறார், எனினும், உலகின் தீமையிலிருந்து தூரத்தில் இருக்கிறார். பூமியில் இருந்த போது, எல்லா வகையான மக்களுடனும் நெருங்கி அளவளாவினார், எனினும் "இருளடைந்த" என்று சித்தரிக்கப்பட்டுள்ள வாழ்க்கை வழியிலிருந்து "பிரிந்து" இருந்தார்.[48]

அவரைப் போலல்லாமல், நாம் சில நேரங்களில் இருளுக்கு இரையாகிவிடுவோம். நாம் பாவம் செய்த போது, நாம் தேவனிடம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து, நமது கர்த்தருடைய கிருபையின் மூலம் மன்னிப்பைத் தேட வேண்டும். இந்த வழியாக இயேசுவின் இரத்தத்தால் தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்டு, நாம் தொடர்ந்து "வெளிச்சத்தில் நடக்க" முடியும் (காண்க 1 யோவான் 1:7-10).

வசனம் 27 **முன்பு பிரதான ஆசாரியர்கள்** கிறிஸ்துவைப் போல அல்லாமல் **சொந்த பாவங்களுக்காகவும் … பலி செலுத்த** [வேண்டும்] என்று கூறுகிறது. பாவ நிவாரண நாளிலே,

> தேவனே, நானும் என் வீட்டாரும் உமக்கு முன்பாக அக்கிரமம் நடப்பித்து, மீறுதல்கள் செய்து, பாவஞ்செய்தோம், தேவனே, நான் செய்த அக்கிரமத்தையும், மீறுதல்களையும், பாவத்தையும், நானும் எனது வீட்டாரும் உமக்கு முன்பாக செய்த மீறுதல்களையும் பாவங்களையும் மன்னித்தருளும், உமது அடியானாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியது போல …[49]

என்று பிரதான ஆசாரியன் ஜெபம் செய்தான்.

இயேசு ஒருபோதும் இப்படிப்பட்டவைகளை கூறவில்லை, ஏனெனில் அவர் பாவமற்றவராக இருந்தார். கிறிஸ்து உண்மையில் "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி" (1 பேதுரு 1:19). அவர் மூலமான நமது மீட்பு, நாமும் பாவத்தினால் மாசற்றவர்களாகும்படிக்கு மிகவும் மேன்மையானதும் அற்புதமானதுமாக இருக்கிறது. அவர் பாவிகளுக்கு விலகினவராய் இருக்கிறார் (வசனம் 26) ஏனென்றால் அவர் பாவம் இல்லாதவராய் இருக்கிறார் (4:15). எனவே அவர் எந்த மனிதனுக்கும் மேலேயே இருந்து, **வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார்** (வசனம் 26). அவர் பரலோகத்தில் வாசம் செய்கிற தேவதூதர்களிலும் உயர்வானவர். இது இயற்கையாகவே உண்மை ஏனென்றால் எல்லா படைப்பும் அவருக்கு உட்பட்டவை (எபே. 1:22, 23). அவரை உயர்ந்தவராகச் செய்வதில் உயிர்த்தெழுதல், பரத்திற்கு ஏறுதல் மற்றும் மகிமை அடைதல் யாவும் உள்ளடங்கி உள்ளது. "மேலே பரிசுத்த ஸ்தலத்தில் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற நமது பிரதான ஆசாரியரின் மிகச் சிறந்த பரிபூரணத்தை அது சித்தரிக்கிறது."[50] அவர் பரலோகத்தில் தேவனோடு ஆட்சி செய்கிறார், எனவே வெளிப்படையாகவே "வானங்களைக்" காட்டிலும் உயர்ந்தவர்.

இப்போது அவருடைய நிலைப்பாடு புரிதல் வரம்புகளை விட அதிகமாக உள்ளது; அதாவது, நாம் அதை விசுவாசத்தால் ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் இந்த வாழ்க்கையில் கூர்ந்து கவனித்தல் அல்லது சரீர அனுபவங்களின் மூலம் உணர முடியாது.

பிரதான ஆசாரியன் பாவநிவிர்த்தி நாளில் மட்டுமே சேவை செய்வது போல் நாம் நினைக்கிறோம் (வசனம் 27), ஆனால், "பிரதான ஆசாரியன் முழு தேசத்தின் சார்பாக நாள்தோறும் ஜெபங்களையும் பலிகளையும் செலுத்துகிறான்"[51] என்று ஃபைலோ கூறினார். "பிரதான ஆசாரியனுடைய வருஷத்தின் பலியையும் ஆசாரியர்களின் தினசரி பலிகளையும் எழுத்தாளர் வெறுமனே ஒன்றாக கலந்திருக்கிறார்" என்று இந்த வசனத்தைப் பற்றி தாமஸ் ஹெவிட் கூறியிருப்பது சரியாக இருக்கலாம்[52] இயேசுவின் ஊழியத்தில் நம்முடைய பலி மறுபடியும் தேவை இல்லை; அனைத்திற்கும் **ஒரு முறை தான்** (ἐφάπαξ, *எஃபாபாக்ஸ்* 9:12; 10:10) என்றும் "ஒரு முறை" (ἅπαξ, *ஹாபாக்ஸ்*; 9:28) என்றும் கூறப்பட்டது. இவை எபிரெயரில் முக்கியமான வார்த்தைகள். கிறிஸ்துவின் தொடர்ச்சியான பலி என்ற யோசனை முற்றிலும் புதிய ஏற்பாட்டிற்கு மாறுபட்டதாகவும் மீறலாகவும் உள்ளது. பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியன் தனது சொந்த பாவங்களுக்காகவும் மீண்டும் மீண்டும் பலி செலுத்தினான் (லேவி. 16:6, 11); ஆனால் கிறிஸ்துவின் பலி "அனைத்திற்கும் ஒருமுறை" ஆகும். "மக்காபாயன் நாட்களின் தியாகிகள் தங்கள் சக-இஸ்ரவேலரின் சார்பாக ஒரு பிராயச்சித்தமாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் தங்கள் வாழ்க்கையை அளித்தார்கள் …"[53] என்பதால் மற்றவர்களுக்காக ஒருவர் மரிக்கும் யோசனை ஏற்கெனவே யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இயேசு **தன்னையே பலியாகக் கொடுத்தார்** என்பது அவருக்கும் சாதாரண லேவிய ஆசாரியனுக்கும் உள்ள மற்றொரு முக்கியமான வேறுபாடு ஆகும். 7:27 இல் முதல் முறையாக இந்த வேறுபாடு எழுதப்பட்டுள்ளது, ஆனால் பின்னர் எபிரெயரில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

**வசனம் 28.** பழைய ஏற்பாட்டின் **ஆசாரியர்கள்** வலிமையின்மையை அல்லது பலவீனங்களைக் கொண்டிருந்தனர் (5:2). கிறிஸ்துவில் நாம் ஒரு சிறந்த ஆசாரியரைக் கொண்டுள்ளோம். வசனம் 28 இரண்டு முந்தைய வசனங்களின் சுருக்கம் ஆகும். பழைய உடன்படிக்கையின் ஆசாரியர்கள் **பலவீனமானவர்கள்**, பாவமுள்ளவர்கள், மரிப்பவர்கள். சிலர் தகுதியற்றவர்களாகவும் பெருமையுடையவர்களாகவும் இருந்தனர். கிறிஸ்து இந்த குணாதிசயங்களில் ஒன்றையும் கொண்டிருக்கவில்லை; அவருடைய பூமிக்குரிய வாழ்க்கையின் காலப்பகுதியில் அவரைக் கட்டாயப்படுத்திய அனைத்து மனித பலவீனங்கள் மற்றும் நம்மைப் போன்ற இயல்பை அவர் வெற்றிகொண்டார். "பலவீனம்" என்ற வார்த்தை பலவீனத்தினால்

செய்யப்பட்ட பாவத்திற்கும் வேண்டுமென்றே செய்யப்பட்ட பாவத்திற்குமுள்ள வேறுபாட்டைக் குறிக்கலாம். “வேண்டுமென்றே பாவம் செய்த ஒரு பிரதான ஆசாரியன் அலுவலகத்தில் தொடர முடியாது.”[54]

சங்கீதம் 2:7 மற்றும் 110:4, இரண்டு முக்கிய தீர்க்கதரிசனங்களின் எண்ணங்கள் கிறிஸ்து நம்முடைய **பூரணர்** என்பதாக இங்கே இணைக்கப்பட்டுள்ளது, மோசேயின் பிரமாணம் கொடுக்கப்பட்ட நீண்ட காலத்திற்குப் பிறகு எழுதப்பட்ட சங்கீதம் 110:4 கூறுகிறது, “‘நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்’ என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்.” பழைய முறை மாற்றப்படும் என்று இந்த அறிக்கை அதை வலியுறுத்துகிறது. பிரமாணமும் ஆசாரியத்துவமும் பிரிக்க முடியாதவை மற்றும் ஒன்றாக மறைந்து போகிறவைகள் என்று மீண்டும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. **நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு உண்டான ஆணை** அந்த பிரமாணத்தின் ஒரு பகுதியாக உண்மையான அர்த்தத்தில் இல்லை. சங்கீதம் 110:4-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய ஆணை, கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கைக்கான வழியை உண்டாக்க உதவியது. “மோசேயுடைய ஆசாரியத்துவத்தின் தகுதியின்மைக்குச் சரியான கால கிரமம் என்னவென்று அது விளக்கியது.”[55]

வசனங்கள் 26 முதல் 28 இதுவரை உள்ள நிருபத்தின் முக்கிய குறிப்புகளின் ஒரு சுருக்கத்தை அளிக்கின்றன: ஒருபோதும் மாற்றப்படாத ஒரு பூரண பிரதான ஆசாரியராகிய தேவ**குமாரனால்** நியாயப்பிரமாணத்தினாலான ஆசாரியத்துவம் மாற்றப்பட்டது. அதிகாரம் 7 இல் காரணம் கூறும் பகுதி இன்று நமக்கு வித்தியாசமாகத் தோன்றலாம், ஆனால் ஆசிரியர் ஆரோனின் ஆசாரியத்துவம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று நம்புகிற எபிரேயர்களுக்கு எழுதுகிறார் என்று நினைவில் கொள்ளுங்கள். இது பக்தியுள்ள எபிரெயர்களுக்கு அத்தகைய செய்தியை எழுத தைரியம் கொடுத்தது.

## பயன்பாடு

### வேதவசனங்களை உரைபெயர்த்தல் (7:1, 2)

மெல்கிசேதேக்கு அப்பத்துடனும் திராட்சரசத்துடனும் ஆபிரகாமை வரவேற்றான் என்று ஆதியாகமம் 14:18 கூறுகிறது. பல ஆரம்ப வர்ணனையாளர்கள் இதை கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஒரு வகையாக, மெல்கிசேதேக்கு, கர்த்தருடைய இராப்போஜனம் ஆரம்பித்த போது இயேசு பயன்படுத்திய அதே பொருட்களைப் பயன்படுத்தினான் என்று குறிப்பிட்டார்கள். இது ஃபிலோ மற்றும்

அலெக்ஸாண்டிரிய சிந்தனைப் பள்ளி - எல்லாவற்றையும் வேதாகமத்தின் ஒரு உருவகமாக மாற்றுகிற கருத்துக்களைக் கொண்டே இருந்தது. தேவனுடைய வார்த்தையை இதுபோன்ற விதத்தில் நடத்துவது அநியாயம். நிச்சயமாக, பின்சந்தர்ப்பங்களிலும் வேதாகமத்தில் உள்ளவர்களிலும் நிறைவேற்றப்படுகிற சில மாதிரிகளும் முரணான மாதிரிகளும் உருவகங்களும் நிகழ்வுகளும் உள்ளன. இருப்பினும், வேதாகமம் கூறும்போது அல்லது இவ்வாறு சுட்டிக்காட்டும் போது அவைகளை உதாரணமாக அல்லது தத்துவமாக மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும். பேதுரு நோவாவின் இரட்சிப்பை ஒரு விதமான ஞானஸ்நானமாக பயன்படுத்தினான் (1 பேதுரு 3:20, 21). கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு ஒரு படிப்பினையாக பவுல் இஸ்ரவேலின் ஆரம்பகால வரலாற்றைப் பயன்படுத்தினான் (1 கொரி. 10:1-12). பழைய உடன்படிக்கைக்குட்பட்ட ஒவ்வொரு ஆட்டுக்குட்டி பலியும் தேவ ஆட்டுக்குட்டி கிறிஸ்துவை ஒரு மாதிரியாக அழைக்க முடிந்தது (பார்க்க யோவான் 1:29). எபிரெயர் 8:2, 5, பூமிக்குரிய வாசஸ்தலம் இயேசு இப்போது அவருடைய பிரதான ஆசாரியப் பணியைச் செய்கிற பரலோக வாசஸ்தலத்தின் மாதிரியாகும்.

எனினும், ஒருவர் ஒவ்வொரு வார்த்தை, சிந்தனை, மற்றும் நிகழ்வை ஒரு மாதிரியாக எடுக்க முற்பட்டால், அவர் சீக்கிரத்தில் வேதவாக்கியங்களை அர்த்தம் அற்றதாகச் செய்வார். “நீங்கள் வேதாகமத்தின் மூலம் எதையும் நிரூபிக்க முடியும்.” என்று சிலர் கூறுவது ஆச்சரியமே இல்லை. நாம் பிரசங்கிக்கும் போதும் போதிக்கும் போதும், ஒரு வசனத்தை பொருள்கொள்ள நோக்கம் இல்லாத ஒரு பொருளைக் கொடுக்க முயன்று நாம் எப்போதும் குற்றவாளிகளாகாமல் இருப்போமாக.

மறுபுறம், ஒவ்வொரு வார்த்தையிலும் தேவனுடைய வெளிப்பாடு குறிப்பிடத்தக்கது என்று நாம் கண்டுணர வேண்டும். எந்த வார்த்தையும் அர்த்தமற்றதல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் வேதவசனங்களை கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். இது மூல மொழிகளில் இருந்து வார்த்தைகளின் சரியான பொருளை உறுதி செய்ய உதவுகிறது. இயல்பாகவே, பல வார்த்தைகளும் சொற்றொடர்களும் ஆசிரியர்கள் அந்த கால கட்டத்தில் நேரடியாக வழங்கியுள்ள (εφφαθα, *எஃப்பதா*), “திறக்கப்படுவாயாக” என்பது போல (காண்க மத். 27:46, மாற்கு 7:34) பொருள்விளக்கம் தேவைப்படுகிறது.

## ஒரு பெரிய சந்திப்பு (7:1-10)

சோதோம் மற்றும் பள்ளத்தாக்கின் நகரங்களில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட அவர்களின் கொள்ளைப் பொருட்களால் ஏற்றப்பட்ட வண்டிகள் அல்லது ஒட்டகங்களுடன் ஆபிரகாம் ஐந்து கிழக்கு ராஜாக்களைக் கொன்றதிலிருந்து திரும்பினான். சோதோமின்

மன்னன் நகரத்தில் ஒரு முக்கிய இடத்தோடு செல்வம் மற்றும் கௌரவத்துடன் அவனைக் கௌரவப்படுத்தியிருக்கக் கூடும். களைப்பாக, ஆபிரகாம் எருசலேமுக்கு அருகே நின்றான், அங்கே ஆபிரகாமுக்கும் அவனுடைய 318 ஊழியர்களுக்கும் மற்றும் சிறைபிடித்து திரும்பி கொண்டு வந்தவற்றிற்கும் ஒரு ஆழ்ந்த உபசாரம் காட்டிய ஒரு நேர்மையான மன்னனால் அவன் சந்திக்கப்பட்டு புத்துயிர் பெற்றான். அவன் எதிர்பார்த்ததை விட அதிகமாக மெல்கிசேதேக்கு நிறைவேற்றினான்.

நவீன காலத்திற்கான இந்த சாத்தியமான பயன்பாட்டைக் கருத்தில் கொள்ளுங்கள்: நீங்கள் தற்போது பெறுவதைவிட அதிக ஊதியத்துடன் உங்களுக்கு ஒரு பணி வழங்கப்படுகிறது. பணி உங்களுடையது, ஆனால் ஒரு நிபந்தனையுடன்: "உங்கள் வாழ்க்கை ஒரு கிறிஸ்தவனாக நன்கு அறியப்படுகிறது, மேலும் இந்த வியாபாரத்து வெற்றியின் உத்தரவாதத்திற்காக ஒப்பந்தங்கள் செய்வதில் நீங்கள் உங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று பணி வழங்கியவர் உங்களுக்குக் கூறுகிறார். நீங்கள் ஆசைப்படுகிறீர்கள், மேலும் உங்களுக்கு ஊக்குவிப்பவர் ஒருவர் தேவைப்படுகிறார். பின்னர், உன்னதமான மற்றும் நேர்மையான குணசாலி ஒருவர் உங்கள் பக்கம் வருவார்; நீங்கள் அடைய எதிர்பார்த்ததை விட அவருடைய நிலை அதிகமாகும். அவர் நீதிமான் மற்றும் வெளிப்படையானவர்; தனிப்பட்ட ஆதாயத்திற்காக பொய் கூறுகிற வகையைச் சார்ந்தவர் அல்ல. அவரது கூட்டாளியாக, அவரது ஐக்கியத்தை அனுபவித்து, அவரது ஒப்புதல் பெறுவது, சோதனையின் சூழலுக்கு அருகே புதிய காற்றின் ஒரு மூச்சு போலானதாகும். சரியானதைச் செய்ய நீங்கள் பலப்படுத்தப்பட்டு இருக்கிறீர்கள், அதனால் நீங்கள் வாய்ப்பை உதறித் தள்ளிவிடுகிறீர்கள்.

நம்மில் எத்தனை பேர் இதனைச் செய்ய முடியும்? மெல்கிசேதேக்கு போன்ற ஒரு நண்பர் நமக்கு வேண்டும். இயேசு நமக்குச் செய்கிறது போல, அவர் ஆபிரகாமை புத்துணர்ச்சி அடையவும் பலப்படுத்தவும் செய்தார் (எபி. 4:16).

### முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பெயர்கள் (7:1-10)

யூதர்களுக்கு பெயர்கள் சிறப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தன. அடிக்கடி ஒரு பெயர் ஒருவரது தன்மையையும் அவரது அடையாளத்தையும் வெளிப்படுத்தியது. "மெல்கிசேதேக்கு" என்பதன் பொருள், "நீதியின் ராஜா" என்பது குறிப்பாக நன்றாக மேசியாவுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. இயேசு "நீதியை நேசித்தார்" (1:9; சங். 45:6), மேலும் அவர் சமாதானப்பிரபுவாக இருந்தார் (ஏசாயா 9:6). கிறிஸ்து நமது சமாதான காரணர் (எபே. 2:14); எல்லா உண்மையான சமாதானமும் அவரிடம் இருந்து வருகிறது (பிலி. 4:4-8). விசுவாசத்தின்

மூலம் நியாயப்படுத்துதல் அந்த சமாதானத்திற்கு முன்பே வருகிறது என்று ரோமர் 5:1, 2 குறிப்பிடுகிறது.

இயேசுவும் மெல்கிசேதேக்கும் ஒரே மாதிரி இருக்கிறார்கள், இருவரும் ராஜாக்களும் ஆசாரியர்களும். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களின் ராஜாக்கள் பலிகளைச் செலுத்துவதில் ஆராதிப்பவர்களோடு கலந்துகொள்ள முடிந்தாலும், அவர்கள் ஆசாரியர்களைப் போல அந்தச் சடங்குகளை நிர்வகிக்க முடியாது. உசியா தனது சொந்த ஆசாரியனாக செயல்பட முயற்சித்து, தண்டிக்கப்பட்டான் (2 நாளா. 26:16-21). சவுலிலிருந்து அவன் கற்றிருக்க வேண்டும் (1 சாமு. 13:2-14; 15:10-35). இயேசுவுக்கு முன்பு ஆட்சி செய்த மெல்கிசேதேக்கு “அரசனல்லாத ஆசாரியன்” என்பதற்கு குறிப்பிடப்பட்ட ஒரே விதிவிலக்காக இருக்கிறான். நிச்சயமாக, முற்பிதாக்கள் காலத்தில் வரலாறுகள் மறுநினைவு படுத்தப்படாத மற்றவர்கள் இருந்திருக்கலாம். எபிரெயரின் எழுத்தாளர் மெல்கிசேதேக்கை கிறிஸ்துவின் நிழலாக அங்கீகரித்தான். அதன் காரணமாக நாம் மிகுந்த மரியாதையுடனும் ஆச்சரியத்துடனும் மெல்கிசேதேக்கைத் திரும்பிப் பார்க்க முடியும் மெல்கிசேதேக்கு பூமியில் இயேசுவுடன் ஒப்பிடப்படவில்லை, ஆனால் பரலோகத்தில் நித்தியமான மற்றும் மிக உயர்ந்த தேவகுமாரனாக. அவர் ஆசாரியராக/ராஜாவாக உண்மையில் அவரது மிகப்பெரிய வாரிசுடன் ஒப்பிடத்தக்கவராக இருந்தார்.

மெல்கிசேதேக் ஆபிரகாமை ஆசீர்வதித்தான், இயேசு உலகத்தை ஆசீர்வதிக்கிறார். தங்கள் குழந்தைகளை ஆசீர்வதிக்க முற்பிதாக்களையும் (ஆதி. 9:24-27; 48:15) மக்களை ஆசீர்வதிக்க ஆசாரியர்களையும் (எண். 6:24-26) தேவன் அனுமதித்திருந்தாலும் கூட, உண்மையிலேயே திவ்விய வல்லமை மட்டுமே ஆசிர்வதிக்க முடியும், குழந்தைகளை ஆசீர்வதிப்பதற்காக இயேசு தமது கைகளை வைத்தபோது இது எவ்வளவு ஒரு அற்புதமான காரியமாக இருந்திருக்க வேண்டும் (மாற்கு 10:13-16)! கர்த்தர் எப்படி அவர்களை ஆசீர்வதித்திருந்தார் என்பதை அவர்களின் எஞ்சியிருக்கும் நாட்களில் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்த முடிந்தது. அத்தகைய ஆசீர்வாதத்திற்காக உயிர் வாழ்வதற்கு அவர்களுக்கு என்ன ஒரு பொறுப்பு கொடுக்கப்பட்டது! நாமும்கூட அளவில்லா ஆசீர்வாதத்தை இயேசுவால் பெற முடிந்து அந்த ஆசீர்வாதங்களை நித்தியத்திற்காக காப்பாற்ற முடியும். பூமியில் அவரது இறுதிச் செயல் அவருடைய சீஷர்களை ஆசீர்வதிப்பதாக இருந்தது என்பது கிறிஸ்துவின் மாதிரியாக இருந்தது (லூக். 24:50). பரலோகத்திலிருந்து இன்னும் அவர் அவ்வாறு செய்கிறார்.

**ஆசாரியன் ஒரு பாலம்-கட்டுபவர் (இணைப்பாளி)**

ஒரு ஆசாரியனின் நோக்கம் என்ன? "ஆசாரி" என்பதற்கான லத்தீன் சொல் *பொன்டிஃபெக்ஸ்,* என்பது இலக்கியரீதியாக ஒரு "பாலம்-கட்டுபவர்" என்ற பொருள் படுகிறது. இயேசு இந்த உலகத்திலிருந்து தேவனுடைய பிரசன்னத்திற்கு நமது பாலத்தைக்-கட்டுபவர். அவர் ஒரு புதிதான வாழ்க்கை வழியைத் திறந்தார் (எபி. 10:20). ஒரு காலத்தில் தூரத்திலிருந்த நமது தகப்பன் இப்பொழுது அருகில் இருக்கிறார். தேவனுடைய பிரசன்னத்தில் ஆவிக்குரிய நிலையில், நமக்கு ஏற்படுத்திய நமது மீட்பை இயேசு பெற்றார். அவரை அணுகுவதற்கு நாம் பயப்படாதிருந்து (எபி. 4:15, 16), மேலும் அவருடனும் அவரது குமாரனுடனுமான ஐக்கியத்தை அனுபவிப்போமாக (1 யோவான் 1:3).

**"உன்னத தேவன்" (7:1)**

பண்டைய உலகில், பல தெய்வங்கள் வெவ்வேறு இடங்களில் உள்ள மக்களால் வணங்கப்பட்டு வந்தனர். கொடுக்கப்பட்ட நகரம் அல்லது பிராந்தியத்தின் மக்களைப் பாதுகாப்பதாகவும் ஆசீர்வதிப்பதாகவுமான பாவனை மூலம் உள்ளூர் தெய்வங்கள் தங்கள் மதிப்பை நிரூபித்தன. யெகொவாவுக்கு மட்டுமே "உன்னத தேவன்" என்ற பெயர் கொடுக்கப்பட்டது (ஆதி. 14:18; பார்க்க உபா. 32:8). இந்தக் கருத்து அரிதானதாக இருந்தாலும், இது வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது. அவர் எல்லாவற்றையும் படைத்தவராக இருந்தார். நினிவேயைக் காப்பாற்ற யோனாவுக்குக் கட்டளையிட்ட தேவனிடமிருந்து அவன் தப்பி ஓடினாலும், எல்லாவற்றையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் என்று விருத்தசேதனமில்லாத மாலுமிகளிடம் குற்றத்தை அறிக்கையிட்டான் (யோனா 1:9).

தன்னை ஒரு விசேஷ வல்லமை வாய்ந்தவராகக் கருதிய ராஜா ஒரு "ராஜாதி ராஜா" என்று அழைக்கப்பட விரும்பினான். இஸ்ரவேலர் நன்றாக தெரிந்திருந்து தேவனை "ராஜாதி ராஜா" என்று குறிப்பிட்டார்கள். ஒருவரும் மேலானவர்கள் இல்லை, மேலும் அவர்கள் சிறப்புற்றிருந்த நாட்களில் அதை இஸ்ரவேலர் நினைவில் வைத்திருந்தனர். உண்மையான மற்றும் ஒரே தேவனை விஞ்சி விட வேறு யாராலும் முடியாது.

**மகத்துவம் பகுத்தாயப்பட்டது (7:4)**

மெல்கிசேதேக்குவை ஆபிரகாமுடன் ஒப்பிடும்போது மிக உயர்ந்தவனாக இருந்திருந்தால், முந்தையவர் விசுவாசிகளுக்குத் தகப்பனாகத் தேர்வு செய்யப்படாதது ஏன்? ஆபிரகாம் அவனுடைய பலவீனங்களைக் கொண்டிருந்தான், ஆனால் அவனுடைய விசுவாசம் -

தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் அவனுடைய முழு நம்பிக்கை - அவனது முக்கியத்துவம் வாய்ந்த பண்பாக இருந்தது. கௌரவமான பாத்திரமாகிய “தேவனுடைய பிரதான ஆசாரியனாக” மெல்கிசேதேக்கு உயர்த்தப்பட்டிருக்க அவனுக்கு இதேபோன்ற விசுவாசம் இருந்திருக்க வேண்டும்.

ஆபிரகாமின் மற்றுமொரு பெருமைமிகு குணாதிசயமானது அறம் நிறைந்த குணமாகும். தனக்கு பின்வரும் தனது பிள்ளைகளுக்கு கட்டளையிடக் கூடியவனாகவும் அவன் இருந்தான் (ஆதி. 18:19). இந்த குணாதிசயத்தின் சக்தியானது பலராலும் கவரப்பட்டதாயிருந்தது, இருப்பினும் சிலர் பெறக் கூடியவர்களாயிருந்தனர். அவனுடைய தாக்கம் நான்கு தலைமுறைகளுக்கு தேவனை நேசிக்கிறவர்களிடம் காணப்பட்டது. (யோசேப்பை உதாரணமாக எடுத்துக்கொள்ளவும்.) மெல்கிசேதேக்குடன் இது சாத்தியமாகும், அவனுக்கு தலைமுறை பதிவுகளும் இல்லை, பிள்ளைகளும் இல்லை. ஆபிரகாமைப்போன்று இவன் கட்டளையிடும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளக் கூடாதவனாக இருந்தான்.

**தசமபாகம் (7:4-8)**

மெல்கிசேதேக்கிற்கு ஆபிரகாம் கொடுத்த பரிசு, தசமபாகம் கொடுக்கும் புதிய ஏற்பாட்டு சபைகளுக்கான கட்டளை அல்ல. எனினும், விசுவாசமுள்ள கிறிஸ்தவன், ஜீவனைப் பெற்றுக்கொண்டு, பாவமான அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனின் கிரியைக்கு வாரந்தோறும் பலியிடுவதை ஒதுக்கி வைப்பான்.

கிறிஸ்தவன் தான் “சுகித்து இருக்கிற [இருந்த]” ஒரு பகுதியை கொடுக்க வேண்டும் (1 கொரி. 16:2). நிச்சயமாக, ஒருவன் பத்தில் ஒரு பங்கைக் கொடுக்கவில்லை என்றால், அவன் தாராளமாய்க் கொடுப்பவனாக இருக்க முடியாது. சுவிசேஷத்திற்குப் பிறகு புதிய ஏற்பாட்டில், தசமபாகம் கொடுப்பதைக் குறிப்பிட்டு போதிக்கப்படவில்லை என்றாலும், சிலர் மனமுவந்து கொடுப்பதற்காக பாராட்டினர் (பார்க்க 2 கொரி. 8:1-5). யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் மற்ற பகுதிகளைப் புறக்கணிக்காமல் தங்களது தசமபாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்று இயேசு கூறினார் (மத். 23:23). நிச்சயமாக, சிலுவைக்கும் சபையை ஸ்தாபிக்க பரிசுத்த ஆவியானவர் வருகைக்கும் முன்பு அது இருந்தது. இருப்பினும், தசமபாகம் என்பது ஒரு ஏற்கத்தக்க சதவீதமாக இருந்தது என்பதை இந்த பத்திகளில் இருந்து நாம் சரியாக ஊகிக்கலாம்.

கீழ்ப்படிதலைக் குறித்த தேவனுடைய நியமங்கள் மாறிவிடவில்லை. தசமபாகம், இன்று ஒரு கட்டளை அல்ல, ஒரு “கொள்கை” ஆக கருதப்படலாம். கீழ்ப்படிதலைப் பற்றிய பழைய ஏற்பாட்டு உதாரணங்களை இன்னமும் நாம் பின்பற்றுகிறோம் (பார்க்க

ரோமர் 15:4; 1 கொரி. 10:1-13). நாம் தேவனை ஆராதிக்க வேண்டும் (மத். 4:10; பார்க்க உபா. 6:13), என்று பழைய ஏற்பாட்டில் இருந்து இயேசு போதிப்பதில் இந்தப் பகுதியில் சரியான விளக்கத்தை வழங்குவதற்கு "மட்டும்" என்ற வார்த்தையைச் சேர்த்து. மேற்கோள் காட்டினார். சபைகளால் கொடுக்கப்பட்ட பவுலின் நிதி ஆதாரத்தை நியாயப்படுத்த அவன் பழைய ஏற்பாட்டு விதிகளை முன்னுரையாகப் பயன்படுத்தினான் (1 கொரி. 9:8-10; பார்க்க உபா. 25:4). எனினும், நாம் வேதாகமத்தின்படி எந்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் கட்டளைகளோடும் பிணைபடாமலிருக்கக் கூடாது, அவைகள் புதிய ஏற்பாட்டில் தற்போது பொருந்தாத வகையில் அமைக்கப்படவில்லை.

## உயரியது முதலில் வந்தது (7:9, 10)

ஆபிரகாம் முதலில் வந்ததால், யூதர்களின் பார்வையில் அவனுடைய சந்ததிகளைவிட அவன் முக்கியமானவனாக இருந்தான். லேவி ஆபிரகாமைவிட பின் வந்ததால், அவன் தனது கொள்ளுப்பாட்டனாரைவிட குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவனாகக் கருதப்பட்டான். இன்று அவ்விதமாக நாம் நினைக்கவில்லை; உண்மையாக, நம்முடைய தலைமுறை முந்தைய எல்லோரையும் விட அறிவார்ந்தவர்களாக இருப்பதாக நாம் கற்பனை செய்ய முனைகிறோம். தொழில்நுட்பமாக, எவ்வாறாயினும், ஒழுக்க ரீதியாக அல்லது ஆன்மீக ரீதியில் நம்மை முன்னெடுக்கவில்லை. உயர்ந்த அறநெறி மற்றும் வாழ்வின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளுதல் ஆகியவை மக்களைக் குறிப்பிடத்தக்கவராகச் செய்யும் பண்புகள். நவீன உலகின் மீது சரியான பார்வைக்கு கடந்த காலத்திற்கான மிகுந்த மரியாதை நமக்குத் தேவையாக இருக்கிறது.

உண்மையான மதிப்புகளுக்கு வேத எழுத்துக்கள் நவீன காலத் தத்துவங்களைவிட அதிக இசைவாக இருக்கின்றன. தாவீது தேவஉடன்படிக்கையின் மிகப்பெரிய மதிப்பை உணர்ந்து, "அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது" என்று கூறினான் (சங். 19:10). "அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" என்று சங்கீதக்காரன் அறிவித்தான் (சங். 119:72). உண்மையான முக்கியம் வாய்ந்த இந்தப் பிடிப்புடன் நமது உலகம் ஒரு சிறந்த இடமாக இருக்கும்.

## தேவனின் அமைதிக்கு மரியாதை (7:12-14)

"தேவன் *இதை* செய்யக் *கூடாது* என்று ஒருபோதும் சொல்லவில்லை என்பதால் வேதவாக்கியங்களால் அங்கீகரிக்கப்படாத போதிலும், சபையில் இதை செய்வோம்" என்று அடிக்கடி, மக்கள்

கூறுகிறார்கள் அல்லது நினைக்கிறார்கள். தேவன் உண்மையில் அனுமதிக்காத எல்லாவற்றையும் பட்டியலிட்டிருந்தால் என்ன செய்வது? நம் குழந்தைகளுக்காக இத்தகைய பட்டியலை செய்ய வேண்டியது இருந்தால் என்ன செய்வது? இந்த பட்டியல் எவரும் வாசிப்பதற்கு நீண்டதாகவும், விரிவானதாகவும் இருக்கும். வேதாகம அதிகாரத்தை இந்த வழியில் நோக்குகிறவர்கள் கவனமாகச் சிந்திப்பதில்லை; அவர்களது நியாயப்படுத்துதல் வெறும் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டது. வேதாகமத்தில் குறிப்பிட்ட எதிர்மறையான குறிப்பு இல்லை என்பதால் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று நாம் கருத முடியாது. "ஒவ்வொரு நற்செயலுக்காகவும் நமக்கு உதவுகிற தேவனுடைய வார்த்தையால் அங்கீகரிக்கப்படுகிறதா?" என்று நாம் எப்பொழுதும் கேட்க வேண்டும் (பார்க்க 2 தீமோ. 3:16, 17). குறிப்பிட்ட அறிக்கை, உட்குறிப்பு அல்லது மேற்கோள் மூலம் அங்கீகரிக்கப்படாத எதுவும் ஒரு மனித கண்டுபிடிப்பாகும்.

மனிதனால் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகளை தனிநபர்கள் சபை வழிபாட்டில் கொண்டு வந்திருந்து, ஒவ்வொரு நடைமுறைக்கும் வேதாகம அதிகாரத்தைக் கோருவோரை வெளியே துரத்திவிட்டார்கள். சபையின் வழிபாட்டில் இசைக் கருவியை பயன்படுத்துவது ஒரு பொதுவான வழக்கு. சபையின் வழிபாடு தொடர்பாக இயந்திர இசைக்கருவிகளைப் பயன்படுத்துவது பற்றி, புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒன்றும் கூறப்படவில்லை என்பதால் அதற்கான அதிகாரத்தை யாரும் கண்டுபிடிக்க முடியாது. பழைய ஏற்பாடு அதைக் கட்டளையிட்டது (2 நாளா. 29:25), ஆனால் புதிய ஏற்பாட்டு சபை பொது வழிபாட்டில் இசை வாசிப்புகளை ஒருபோதும் பயன்படுத்தவில்லை என்று சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள்.

பெரும்பாலான பிராட்டஸ்டன்ட் சபைகளில் சபைவழிபாட்டில் இசைக்கருவியின் பயன்பாடு அதிக விவாதத்திற்கான ஒரு அம்சமாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்தது, ஆனால் அது படிப்படியாக பெரும்பாலான சபைப்பிரிவுகளில் அதன் வழியை வென்றது. நம்மைச் சுற்றி இருக்கும் நாடுகளைப் போல் இருக்க நாம் கூச்சலிடாதிருப்போமாக (1 சாமு. 8:5)! கருவிகள் பெரும்பாலும் தேவன் கட்டளையிட்ட இசை வகையை மேலோங்குகிறது. சபை கூடுதலில், பாடல் கற்பித்தலிலும் கடிந்துக்கொள்வதற்குமான கட்டளைகளுக்கு பாடுபவர்கள் மட்டுமே கீழ்ப்படிந்து கொண்டிருக்கிறார்கள் (எபே. 5:19; கொலோ. 3:16).

7:12-14 இன் கருத்து என்ன? "தேவன் இந்தக் கோத்திரத்தை குறிப்பிட்டிருப்பதால், அங்கீகரிக்கப்படாத கோத்திரம் எதுவும் அங்கீகரிக்கப்படவில்லை." வேதாகமம் அமைதியாக இருக்கும் இடத்தில் நாமும் அமைதியாக இருப்போமாக. அமைதியின் தத்துவம்,

அல்லது அதிகாரமற்ற வரையறை, தேவனுடைய வார்த்தையை நிரப்புகிறது. இத்தகைய போதனைக்கு அப்போஸ்தலர்களின் “அறிவுரை இல்லை” என்பதால், புறஜாதி கிறிஸ்தவர்கள் விருத்தசேதனம் செய்யப்படுவது யூத மதவாதிகளுக்கு தவறானது (அப். 15:24). அப்போஸ்தலர்களின் அமைதியானது அதைத் தடுக்கப் போதுமானது.

இந்த உரைக்கான பின்வரும் பயன்பாட்டை கருத்தில் கொள்ள வேண்டும். கொப்பேர் மரத்தினாலான பேழையைக் கட்டும்படி நோவா கூறப்பட்டான்; வேறு எதனாலும் கட்ட அங்கிகரிக்கப்படவில்லை, ஆகவே, அவன் வேறு எந்த வகையையும் தைரியமாகப் பயன்படுத்த முடியாது. வேதாகம அதிகாரத்தைத் தீர்மானிப்பதில் நாமும் இன்றைக்கு அதே செயல்முறையைப் பின்பற்ற வேண்டும். தேவன் “மரம்” என்ற பொதுவான வார்த்தையை பயன்படுத்தியிருந்தால், நோவா எந்த வகையையும் பயன்படுத்தி இருந்திருக்கலாம். இவ்வகைப் புரிதலை சிலர் மறுக்கின்றனர், ஆனால் அதையே எபிரெயர் எழுதிய எழுத்தாளன் பயன்படுத்தி இருக்கிறான். மரியாதைக்குரிய கொள்கை தேவனுடைய அமைதிக்கு இன்னும் பொருந்தும். “அவர்களின் சபையில் *இசை* இருந்தது,” என்ற வார்த்தைகளுடனான ஒரு கட்டளை அல்லது ஒரு உதாரணம் புதிய ஏற்பாடு வழங்கி இருந்தால், நாம் விரும்பும் எந்தவொரு இசையையும் நம்மால் கொண்டிருக்க முடியும். எனினும், வழிபடுவதில் இசை சம்பந்தமாக ஒன்பது புதிய ஏற்பாட்டுப் பாகங்கள் பாடுவதை மட்டுமே குறிப்பிடுகின்றன.[56] இது மட்டுமே நமது இசையை ஒரு *கப்பெல்லாவாக* இருக்க அங்கீகரிக்கிறது. “சிறு சபையின் பாணியில்” என்ற பொருள் கொண்ட இது, ஒரு இத்தாலியச் சொல்லில் இருந்து வந்தது. இதயமாகிய ஒரு கருவியை பயன்படுத்தி, நாம் தேவனுக்கு “மெல்லிசை” (ψάλλω, *ப்ஸாலோ*) பண்ண வேண்டும் (எபே. 5:19).

### “நம்முடைய கர்த்தர்” (7:14)

வசனம் 14 ல் “நம்முடைய கர்த்தர்” என அழைக்கப்படுபவர் வெளிப்படையாக இயேசு கிறிஸ்து. சங்கீதம் 110:1-ன் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (அப். 2:34, 35 இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது), இயேசு இரண்டாவது “கர்த்தர்” என்று பேதுருவின் தைரியமான உறுதிப்பாட்டின் அடிப்படையில், பழைய ஏற்பாட்டின் முதன்மை “கர்த்தர்.” ஆகிய பிதாவாகிய தேவனிடம் இந்த “கர்த்தர்” மூலம் நாம் பிராத்திக்கிறோம், இயேசு புதிய ஏற்பாட்டின் கர்த்தர்.[57]

நாம் இந்த உலகத்தோடு ஒத்திராதது மூலம், இயேசுவை நம்முடைய வாழ்க்கையின் கர்த்தராக உண்டாக்க வேண்டும் (ரோமர் 12:1, 2). நாம் அதைச் செய்யும்போது, “தேவனுடைய சித்தம்

என்னவென்று” *நிரூபிக்கும்* பெரும் குறிக்கோளை நாம் நிறைவேற்றுகிறோம் (ரோமர் 12:2). நம்முடைய கர்த்தரைச் சேவிப்பதால் உண்டாகும் அதிசய சந்தோஷத்தை நாம் நம்மிடமும் மற்றவர்களிடமும் நிரூபிக்கிறோம். அவர் உங்கள் வாழ்க்கையின் ஆண்டவரா? நீங்கள் அதை நிரூபித்திருக்கிறீர்களா? ஒரு சரியான விசுவாசத்தின் பாதுகாப்பு மூலம் கிறிஸ்துவிடம் மற்றவர்களை வழிநடத்திச் செல்ல முடிந்து, “கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்” (1 பேதுரு 3:15). கிறிஸ்துவுடன் கர்த்தராக நமது வாழ்க்கையில் நாம் மிகவும் அதிகமாக விரும்பிய சமாதானத்தை நாம் அறிவோம். தைரியத்துடன் வாழ்க்கையை எதிர்கொள்ளும் நம்பிக்கையை நாம் பெற்று, நமது விசுவாசம் பலவீனமாகும்போது அதை மேற்கொள்ளும் வல்லமையைக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்து பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவர், நமது இதயங்களில் கர்த்தரானால் நமக்குத் தேவைப்படுகிற “அபரிமிதமான கிருபை” மற்றும் விருப்பம் நமதாக முடியும் (அப். 4:33). இப்போதும் கூட அளவிடமுடியாத கிருபை நமது பொக்கிஷம்.

**தேவனிடத்தில் சேருவது (7:19)**

தேவனிடத்தில் சேருவதற்கு நாம் கட்டளையிடப்படுகிறோம் (யாக். 4:8). அவர் ஏற்கனவே நமக்கு நெருங்கி வந்திருக்கிறார்; நமது பங்கைச் செய்யும் வாய்ப்பை நாம் மறுக்கக் கூடாது. நாம் அவருக்கு பதிலளித்தால் அவர் மேலும் அருகில் வருவார் என்று யாக்கோபு குறிப்பிட்டான். தேவனிடமிருந்து வருகிற மத்தேயு 11:28-30-ன் பெரிய அழைப்பு, கிறிஸ்துவின் மூலம் அவரிடம் வருமாறு நம்மை வற்புறுத்துகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 22:17 இன் “தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; …” என்ற கட்டளைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

குறைந்தபட்சம் இரண்டு காரியங்கள் தேவனிடமிருந்து ஒருவனைத் தள்ளி வைத்திருக்கும். முதலாவது *பாவம்* ஆகும். நம்முடைய பரிசுத்த தேவனின் இயல்பு பாவிகள் அவரது முன்னிலையில் வருவதை மறுக்கிறார் (ஏசாயா 59:1, 2; வெளி. 21:27). மனிதர்கள் அதை உணர்வதாகக் காணப்படுகிறார்கள். இரண்டாவது *பயம்* ஆகும். நமது ஆத்துமாக்களில் கிட்டத்தட்ட குற்றம் நிறைந்த உள்ளார்ந்த உணர்வுடன் தேவனை எதிர்நோக்குதல் பயத்தைக் கொண்டு வருகிறது. ஏசாயா கர்த்தருடைய மகிமையைக் கண்டபோது, தன்னை “அசுத்த உதடுள்ள” ஒரு பாவி என்று அடையாளம் கண்டான் (ஏசாயா 6:5). வார்த்தையின் மூலமாக மன்னிப்பைப் பெறுகிறோம் என்று

புரிந்துகொள்பவர்கள் பயம் இல்லாமல் மரணத்தை எதிர்கொள்ள முடியும் (எபி. 2:14, 15). காலப்போக்கில், விசுவாசம் நிறைந்த இதயத்துடன், அந்தப் பயத்தை மேற்கொண்டு, தனது பரலோக தந்தையின் அருகில் இருக்க வாஞ்சித்திருப்பதால், ஒருவன் தேவனுடைய வீட்டிற்குச் சென்று அவருடன் இருக்க முழுமையான தயார் நிலையில் இருக்க முடியும்.

**கட்டுகிற விருத்தசேதனம் (7:21)**

கலாத்தியர் 5:1-5 மற்றும் ரோமர் 2:25-28, புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு விருத்தசேதனம் செய்ய முயன்ற யூதேயர்களைப் பற்றி போதிக்கிறது. தேவனிடமிருந்து நியாயப்படுத்தலைப் பெறுவதற்காக பிரமாணத்தில் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால், பிரமாணம் அனைத்தையும் பின்பற்ற வேண்டும் என்று ஒருவன் தர்க்கரீதியாக சொல்லக்கூடும் அவ்வாறே, பிரமாணத்தின் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டு மற்றவைகள் நீக்கப்பட்டால், தர்க்கரீதியாக, யாவும் நீக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி பவுல் அந்த நடவடிக்கையைக் கண்டித்தான். யூத விசுவாசிகளுக்காக எபிரெயர் எழுதப்பட்டதால், விருத்தசேதனம் பற்றி குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. புறஜாதி கிறிஸ்தவர்களைப் பற்றிய முந்தைய எழுத்துக்களில் இந்த விஷயம் தீர்க்கப்பட்டு விட்டது.

**ஒரு நிரந்தர ஆசாரியத்துவம் (7:21)**

புதிய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்தைப் பற்றி அவர் மனம் மாறமாட்டார் என்று தேவன் ஆணையிட்டிருக்கிறார். கிறிஸ்துவிற்குப் பிறகு ஒரு புதிய "தீர்க்கதரிசியால்" வழிநடத்தப்படும் எந்த பிந்தைய வழிமுறைக்கும் இடமில்லை. ஆரோன் அல்லது மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமைக்கு புத்துயிரூட்டி யாராலும் நியாயப்படுத்த முடியாது. வேதாகமத்தின் கோட்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளில் மாறவில்லை.

இது குறித்து, தேவன் ஆபிரகாமை ஆசீர்வதிப்பார் என்று குறிப்பிடுகிற தேவனின் திட்டம் "அவருடைய மனதை மாற்றுவதில்லை." பெரிய உடல் ரீதியான ஆசீர்வாதங்கள் இருந்தபோதிலும், எல்லாவற்றிலும் மிகப் பெரியது ஆவிக்குரியதாக இருந்தது. விசுவாசத்தின் தந்தையாக (பார்க்க ரோமர் 4:16), ஆபிரகாம் சபை மூலம் தேவனின் ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து பெறுகிறான். மாறாக, இஸ்ரவேலுக்கான அனைத்து நில வாக்குறுதிகளும் பாபிலோனிய சிறையிருப்பிற்கு முன் அல்லது அப்போது வழங்கப்பட்டன. ஒரு இனமாக அல்லது ஒரு தேசிய மக்களாக, இஸ்ரவேலுக்கு தங்கள் நிலத்தை அவர்களுக்கு மீட்டெடுக்க நிறைவேறாத வேதாகம வாக்குறுதிகள் எதுவும் இல்லை.

### மற்றொன்றுக்கு ஒரு பிணையம் (7:20-22)

எபிரெயர் 7:22, இயேசுவை புதியதும் மற்றும் உயர்வானதுமான உடன்படிக்கைக்கான "பிணையாளியாக" குறிக்கிறது. ஒருவர் அவரது கடனைச் செலுத்தும் தனது கடமையை நிறைவேற்ற முடியவில்லை என்றால் அந்தக் கடனாளிக்காக யாரோ ஒருவர் பிணையாளியாகிற ஒரு பொதுவான சிறப்பு நடைமுறையை கிரேக்க-ரோம பாரம்பரியம் கொண்டிருக்கிறது. தேவன்பால் நாம் கொண்டுள்ள நன்றிக்கடன் நிறைவேற்றப்படும் என்று இயேசு, நமது பிணையாளியாக, உத்தரவாதம் ஆகிறார்.

தேவன் நமக்கான அவரது வாக்குறுதிகளில் தவற மாட்டார் என்று இயேசு நமக்கு உறுதியளிக்கிறார் என்றும் இந்த பகுதி பொருள் படுகிறது. நமக்கான தேவனுடைய வார்த்தையைக் காப்பாற்றவில்லை என்று நாம் எண்ணினால், ஒவ்வொரு திவ்விய வாக்குத்தத்தமும் காக்கப்படும் என்று நமக்குப் பிணையம் அளித்த கிறிஸ்துவை நாம் நோக்கிப் பார்க்க முடியும். எந்த வழியிலும், அது, நமக்கு தேவனிடமிருந்து வரும் பெரும் ஆசீர்வாதங்களை உறுதிப்படுத்துவது பற்றிய ஒரு அழகான சிந்தனை.

### ஒரு உத்தரவாதம் செய்யப்பட்ட உடன்படிக்கை (7:22)

இயேசு ஒரு சிறந்த உடன்படிக்கைக்கான நமது உத்தரவாதம். ஒரு உத்தரவாதம் அல்லது நிச்சயம் குறித்த உள்ளத்தைத் தொடுகின்ற வரலாறு வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. யூதா பென்யமீனுக்கான பிணையாளியாக தன்னைத்தானே உறுதிப்படுத்தினான்; பென்யமீன் எகிப்தில் இருந்து பாதுகாப்பாக திரும்புவான் என்று அவன் தனது தந்தைக்கு உத்தரவாதம் அளித்தான் (ஆதி. 43:8, 9). "நான் அவனை உம்மிடத்தில் கொண்டுவந்து, உமக்கு முன்பாக நிறுத்தாமற்போனால், எந்நாளும் அந்தக் குற்றம் என்மேல் இருப்பதாக" என்று யூதா கூறினான். எத்தகைய இணையற்ற இயேசு கொடுத்த அவரது முன்மொழிவு! "நான் பூமிக்குச் சென்று மிகவும் வெட்கக்கேடான சிலுவையில் மரித்தலான வலியை நீர் நேசிக்கிற இந்த இழந்த ஆத்துமாக்களுக்காக சகிப்பேன். குற்றமற்றவராக குற்றவாளிக்காக மரிப்பதன் மூலம் நான் தனிப்பட்ட முறையில் மீட்பதற்கான வழியை வழங்குகிறேன் அதனால் நீர் அவர்களை காப்பாற்றுவதற்காக நான் அவர்கள் பழியைச் சுமக்கிறேன் என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேன்" என்று இயேசு, நடைமுறையில், பிதாவிடம் கூறி இருக்கலாம் (பார்க்க ரோமர் 3:23-26). நாம் தேவனுடைய நீதியின் விதிகளை ஒருபோதும் சந்திக்க முடியாது, ஆனால் இயேசுவால் முடியும், அதைச் செய்தார். அவர் நம்மிடம் அன்பாய் இருப்பதால் இப்போது, தேவன் செய்ய விரும்பியபடி அவர் நம்மைக்

காப்பாற்றுவதில் நீதியாக இருக்க முடியும் (யோவான் 3:16). தேவன் செய்கிற அனைத்தும் சரியானது என்பது இந்த அமைப்பின் அதிசயம். அவர் அநியாயமாக செயல்பட முடியாது.

**ஊழியத்திலிருந்து தகுதிநீக்கம் (7:24, 25)**

இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஒரு ஆசாரியனாக தகுதி பெறுவதற்கு சாத்தியமான மிக உயர்ந்த நீதிக்குரிய குணம் படைத்தவராக அவர் இருத்தல் வேண்டும். சரியான வம்சாவளி கொண்ட ஒரு மனிதன் ஆசாரியத்துவத்திலிருந்து நிராகரிக்கப்பட யூத சட்ட மற்றும் பாரம்பரியத்தில் 142 காரணங்கள் இருந்தன. இவை அனைத்தும் உடல் ரீதியானவையாக இருந்து, அவைகள் அவனது உள்ளார்ந்த இயல்பு அல்லது குணத்தை எதுவும் செய்யவில்லை. அவன் பார்ப்பதற்கு எப்படி இருந்தான், எப்படி அவன் அணிந்திருந்தான், எப்படி அவன் முடி வெட்டி இருந்தான் என்பது போன்ற அனைத்தும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. எண்ணற்ற சடங்குகளைக் கடந்து சென்று ஒருவன் ஆசாரியனாக நியமனம் செய்யப்பட வேண்டியிருந்தது.

அந்த விதிகளின் வெளிப்புறத் தன்மை, தேவனிடம் மனிதர்களைக் கொண்டுவரவும் அவர்களைப் பாவத்திலிருந்து தூய்மை அடையச் செய்யவும் நியாயப்பிரமாணம் தவறியது என்ற உண்மையை வலியுறுத்துகிறது. நியாயப்பிரமாணத்தின் விதிகள் மற்றும் வணக்கத்தின் முழு இயல்பும் பார்த்தல், முகர்தல், கேட்டல், தொடுதல் போன்ற உடல் உணர்வை அடிப்படையாகக் கொண்ட வெளிப்புறமாக இருந்தது. எக்காளம் ஊதுவதும், பிரதான ஆசாரியனின் அழகான அங்கிகளும் மனிதனுடைய இருதயத்தோடும் ஆத்துமாவோடும் எதுவும் செய்யவில்லை.

சில யூத கிறிஸ்தவர்கள் உண்மையானவற்றை விட்டுவிட்டு அவைகளின் நிழல்களுக்குத் திரும்ப விரும்பினர் (எபி. 10:1), ஆனால் நிழல்கள் ஒரு வணங்குபவரை தேவனிடம் நெருங்கி வருவதற்குத் தகுதியானவராகச் செய்ய முடியாது. மனிதனுடைய ஆவிக்குரிய தேவைகள் போதுமானதாக இருக்க நியாயப்பிரமாணம் பல உடல் ரீதியான வரம்புகளை கொண்டிருந்தது. நிழலுக்கும் உண்மையான காரியத்திற்குமான வித்தியாசத்தைக் காணாமல் இருப்பது, என்ன ஒரு சோகம்![58] நியாயப்பிரமாணம் பாவத்தையும் தோல்வியையும் சுட்டிக்காட்ட முடியும், ஆனால் இயேசு செய்கிறது போல் அது மக்களை உயரத்திற்கு உயர்த்த முடிவதில்லை.

**இயேசுவும் நமது பிரச்சினைகளும் (7:25)**

பாவம், மரணம், சாத்தானின் சோதனைகள் ஆகியவற்றின் பிரச்சினைகளை இயேசு எவ்வாறு கையாண்டார் என்பது ஆச்சரியமாக

இருக்கிறது. இவைகள் எப்போதும் நமக்கு முன்பாக இருக்கின்றன. நாம் சாத்தானை அனுமதித்தால் அவன் தொடர்ந்து நம்மை சோதிக்கிறான். நாம் தினமும் நம்முடைய கஷ்டங்களை நமக்காக பரிவு கொள்கிற இயேசுவிடம் கொண்டு செல்ல வேண்டும் (பிலி. 4:4-8). இயேசுவில் நாம் எத்ததைய ஒரு நண்பரைக் கொண்டிருக்கிறோம்! உண்மையில் தினமும் ஜெபங்கள் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் அவருடன் நெருங்கிய நட்பை வளர்த்துக்கொள்வதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? இது புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு ஒரு மகத்தான சிந்தனையாகும், விசுவாசத்தினால் நாம் அவருடன் ஒத்துழைக்கும்போது அது இப்போதும் சாத்தியமாகும் (1 பேதுரு 1:3-5). நமது வாழ்வில் கிறிஸ்தவ கிருபையைச் சேர்க்கும் செயல்முறை இப்போதும் இறுதியிலும் இரட்சிப்பின் முழு உத்தரவாதம் வழங்குகிறது (பார்க்க 2 பேதுரு 1:5-11). கிறிஸ்து நம்முடைய சமகாலத்தில் வாழ்கிறார், இல்லை என்றால் நமது மத்தியஸ்தராகவும் பிரதான ஆசாரியராகவும் அவர் பணியாற்றமுடியாது.

நம்முடைய பாவப்பிரச்சனைகளுக்காக இயேசு நமக்கு உதவுகையில், ஞானத்தையும் விசுவாசத்தையும் வளர்க்கும் முயற்சி இல்லாமல் நாம் பாவ ஆசைகளை மேற்கொள்ள முடியாது (1 பேதுரு 2:1-3; 2 பேதுரு 3:18). நமது ஜெபங்களின் மூலம் நாம் “ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை” அடைகிறோம் (எபி. 4:16), ஆனால் இது சோதனையில் இருந்து விடுபடும் வழியைத் தேடுவதற்கான தேவையை அகற்றுவதில்லை (1 கொரி. 10:13).

“அது என் இயல்பு தான். நான் ஒருபோதும் மாறமுடியாது” என்று சிலர் தங்கள் பாவமுள்ள வாழ்க்கை முறைகளைப்பற்றி சொல்கிறார்கள். ஒழுக்கக்கேடான மோசமான சில வகையான மக்கள் மாற்றப்பட்டிருந்தார்கள் என்று பவுல் கூறினான் (1 கொரி. 6:9-11). கொரிந்துவில் உள்ளவர்கள் பாலியல் நெறிதவறுதல் மற்றும் பேராசையின் மொத்த ஒழுக்கக்கேடானவற்றிலிருந்து காப்பாற்றப்பட்டிருந்தால், இன்று சிலரை மாற்ற முடியாது என்று யார் கூற முடியும்? நம்பிக்கையின்மைக்கு மக்களை கொண்டு செல்வதற்காக சாத்தான் அந்தப் பொய்யைப் போதிக்கிறான். இயேசு நம்பிக்கையை அளித்து, நம்பிக்கையின்மையிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறார்.

நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்யலாம், ஆனால் இயேசு மீண்டும் தனது இரத்தத்தை அளித்திருக்கிறார் அல்லது சிலுவை மீது அவருடைய வேதனையானது பிதாவை நினைவுபடுத்துகிறது என்பது ஒரு கற்பனை என்ற கருத்து இந்த உரைப்பகுதியால் நியாயமற்றதாக்கப்படுகிறது. அந்தப் பார்வை, பூமியில் “திருப்பலியை” நியாயப்படுத்த முற்படுகிறது, ஆனால் அது வேதாகமபடியானதல்ல. இயேசுவின் சுய வெறுப்பு எல்லாக் காலங்களுக்கான ஒரேதரம் பலியிடப்பட்ட அவருடைய மனமுவந்த மரணத்தில்

வெளிப்படுத்தப்பட்டது (எபி. 9:27, 28). பிதாவுடனான அவரது தொடர்பு நேரடியானது, ஆனால் மனிதர்கள் செய்வதுபோல இயேசுவின் பலியை தேவனுக்கு நினைப்பூட்டத் தேவையில்லை.

**ஒரு பாவமுமில்லாத ஆசாரியர் (7:26)**

சமய வழிபாட்டு சபைகளில் தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறவர்களுக்காக தேவனிடம் செல்வதாகக் கருதப்படுகிற சிறப்பு ஆசாரியர்கள் இருக்கிறார்கள். நாம் பாவம் செய்யும்போது, ஒரு குறையுள்ள மனித ஆசாரியனிடம் நாம் அறிக்கையிட வேண்டியதில்லை. நம்முடைய பிரதான ஆசாரியன் நம்பப்பட முடியும் என்ற உறுதியை கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் பிதாவை அவர் மூலமாக பிதாவை அணுகுகிற உறுதியைக் கொண்டிருக்கிறோம். அவர் சுத்தமும், பரிசுத்தமுமானவர். அவர் நமது நம்பிக்கைக்கும் உறுதிக்கும் உரியவராயிருந்து நம்மை முற்றிலுமாக மீட்கும் வல்லமை உள்ளவர். எந்த மனிதனும் அந்தப் பணிக்குப் போதுமானவனாக இல்லை.

கிறிஸ்து "குற்றமற்றவர்." அவருடைய விசாரணை எவ்வளவு அநியாயம்! நியாயாதிபதிகள் அவரைத் தேவதூஷணத்திற்காகக் குற்றஞ்சாட்டப்படுவதாக அறிவித்தனர். அவரது குற்றமின்மையை அங்கீகரித்து, பிலாத்து விதிவிலக்காக இருந்தான் (லூக். 23:4, 13-16, 22); ஆனால் அவன் அரசியல் சூழலுக்கு உள்ளாகினான். இயேசு நம்மீதுள்ள குற்றத்தைச் சுமந்து, அவருடைய மரணத்தின் மூலம் நமக்கு ஆவிக்குரிய சுகத்தைக் கொடுத்தார் (1 பேதுரு 2:22-24; 3:18). "அநீதிமானுக்காக" அந்த "நீதிமான்" மரித்த அவரது பண்பு ஒவ்வொரு விதத்திலும் தூய்மையானது.

**விலகி இருந்தாலும், ஒரு நண்பர்? (7:26)**

இயேசு வாழ்க்கையிலும் பண்பிலும், முற்றிலும் வேறுபட்டவராகவும் "பாவிகளிடமிருந்து விலகியவராகவும்." அவர் இருந்தார். அதே நேரத்தில், பாவிகளுக்கு நண்பனாக தன்னை நிரூபிக்க நமக்கான அவருடைய கவலையில், அவர் தனது வல்லமையில் அனைத்தையும் செய்தார். "வரிவசூலிப்பவர்களிடமும் பாவிகளோடுங்கூட சாப்பிட்டு" "ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறார்" என்பது அவரது எதிரிகளால் ஒரு பயங்கரமான காரியமாகக் காணப்பட்டு, அவர் இகழப்பட்டு குற்றம்சாட்டப்பட்டார் (மத். 9:11). உண்மையில் அவர்களுடன் தொடர்பில் இருப்பதுதான் அவர் உலகத்திற்கு வந்திருந்ததன் முக்கிய நோக்கம் என்று அவர் கூறினார் (மத். 9:12, 13). இந்த உறவின் காரணமாக, அவர் அவர்களைப்போல, ஒரு குடிகாரன் என்ற நிலையிலும்கூட இருந்தார் என்பதாகக் குற்றம்சாட்டப்பட்டார் (மத். 11:19).

நாம் பாவிகளோடு நண்பர்களாக இருக்க வேண்டும் - ஆனால் அவர்களின் தீயசெயல்களில் கலந்துகொள்ளும் அளவுக்கு அல்ல. நாம் இயேசுவைப்போல் இருக்கவில்லை; நாம் தீய சகவாசத்தில் நம்மை ஈடுபடுத்தினால் நாம் அதிகம் ஆசைப்படலாம். நமது பக்தியுள்ள செல்வாக்குடன் கிறிஸ்து செய்ய முடிவதுபோல் நாம் குழுவிற்கு வழிகாட்ட முடியாது. ஒரு முறை நான் ஊழியத்திற்குப் பயிற்றுவிக்கப்பட ஒரு கிறிஸ்தவக் கல்லூரிக்குச் சென்ற ஒரு இளைஞனை அறிந்தேன். அவன் ஒரு சிறந்த பேச்சாளனாக ஆனான். ஒரு கல்லூரியின் மாணவ அமைப்பை அவனுடைய வார்த்தைகளால் உணர்ச்சி மிகச் செய்தான் என்பதாக, பின்பு நான் அவனை அறிந்தேன். அவன் விபச்சாரிகளைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த முடியும் என்று எண்ணிக்கொண்டு அவர்களுடன் காபி அருந்தும்படியாக இரவில் வெளியே செல்வதாக அவன் கூறினான். "நீ அத்தகைய பணிக்கு மிகவும் இளமையாக இருக்கிறாய். நீ உன் குடும்பத்தினருக்கும் உன் ஆத்துமாவிற்கும் ஆபத்து ஏற்படுத்துகிறாய்" என்று நான் எனக்குள் நினைத்தேன். அவனும் அவனது மனைவியும் விவாகரத்து செய்து கொண்டனர் என்று அடுத்ததாக நான் கேள்விப்பட்டேன். "பாவிகளின் நண்பராக" இருக்க வேண்டும் என்று அதிகமாக அவன் விரும்பி அவன் தீங்கான வழியில் தன்னை வைக்கிறான். நாம் நல்ல தீர்ப்பை பயன்படுத்த வேண்டும். நாம் "ஒழுக்கக்கேட்டை விட்டு வெளியேற வேண்டும்" மேலும் சில நேரங்களில் அதில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தப்பி ஓட வேண்டும் (1 கொரி. 6:18). தேவன் உண்மையில் சோதனையிலிருந்து வெளியேற ஒரு வழியைத் தருகிறார் (1 கொரி. 10:13), ஆனால் நாம் அதை விட்டுவிலகும் போது, அதை நோக்கி தொடரும் போது அல்ல.

**நங்கூரத்தைப் பிடித்தல்**

*நாம் வார்த்தையிலிருந்து விலகிச்செல்ல* ஆரம்பித்தால் (2:1-4), பின்பு நாம் *வார்த்தையைச் சந்தேகிக்கத்* தொடங்குவோம் (3:7-4:13). *சீக்கிரத்திலேயே*, நாம் *வார்த்தையை நோக்கி மந்தமாகவும்* அசதியான விசுவாசிகளாகவும் மாறிவிடுவோம் (5:11-6:20). விலகிச் செல்லுதலில் இருந்து விடுபட சிறந்த வழி *நங்கூரத்தைப் பற்றிப் பிடிக்க வேண்டும்*!

---

இறுதிக் குறிப்புகள்

[1]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 129. [2]Ibid., 127. [3]Arthur W. Pink, *An Exposition of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 356. [4]Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 127. [5]கரேத் எல். ரீஸ் ஒரு தத்துவம் இங்கே சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று பரிந்துரைத்தார். (Gareth L. Reese, *A Critical and Exegetical*

*Commentary on the Epistle to the Hebrews* [Moberly, Mo.: Scripture Exposition Books, 1992], 104.) [6]"முற்பிதா" என்னும்பதம் (πατριάρχης, *பேட்ரிஆர்கஸ்*; காண்க வசனம் 4) அவருடைய சீஷர்களாக இருக்க முயன்ற, தந்தையருடன் தேவன் தொடர்பு கொண்டு, அவர்களுடைய குடும்பங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆசாரியர்களாக சேவை செய்ய அவர்களுக்கு உதவிய ஒரு நேரத்தைக் குறிக்கிறது. [7]Philo *On Drunkenness* 14. [8]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 249. [9]Josephus *Life* 1. [10]Moses Stuart, *A Commentary on the Epistle to the Hebrews* (London: William Tegg & Co., 1856), 391.

[11]தேவன் "உன்னதமானவர்" என்பது வேறு ஒரு தேவன் குறைவான தகுதி உள்ளவர் என்று குறிக்கவில்லை. [12]பல்வேறு நாடுகள் போரின் கொள்ளை பொருள்களிலிருந்து தசமபாகங்களைக் கொடுத்தன. ரீஸ் இதை தேவனின் மூல கட்டளையிலிருந்து வாய் வார்த்தைகளால் ஒப்படைக்கப்பட்ட பண்டைய பாரம்பரியமாக கருதுகிறது. (Reese, 104, n. 8.) Such tithing is also discussed in F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 140, and Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 (New York: Doubleday, 2001), 343-44. [13]இஸ்ரவேல் புத்திரர் லேவியருக்கு பத்தில் ஒரு பங்கைக் கொடுத்தார்கள். அவர்கள் ஆசாரியர்களிடம் "தசமபாகத்தில் தசமபாகம்" கொடுத்தார்கள் (7:5). லேவியராகமம் 27:30-33; எண்ணாகமம் 18:21, 24, 26-29; உபாகமம் 12:17-19; 14:22; 26:12-14 இல் தசமபாகம் பற்றிய பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணம் காணப்படுகிறது. [14]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 251, n. 7. [15]"ஆசீர்வாதம்" என்ற வார்த்தை, "ஸ்தோத்திரம் செலுத்து" என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டது இயேசு இராப்போஜனத்தில் பாத்திரம் மற்றும் அப்பத்துடன் செய்ததைப்போல அங்கு "ஆசீர்வாதம்" மற்றும் "ஸ்தோத்திரம்" என்ற வார்த்தைகள் ஒன்றோடொன்று மாற்றத்தக்கதாக தெரிந்தன (மத். 26:26; லூக். 22:19). [16]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 159. [17]James Thompson, *The Letter to the Hebrews*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1971), 99. [18]Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 140. The expression is used nowhere else in the New Testament. [19]Stuart, 396. [20]Albert Barnes, *Notes on the New Testament: Hebrews to Jude* (London: Blackie & Son, 1884-85; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1985), 159.

[21]Koester, 354. [22]"For him [the author] the priesthood was the foundation of everything" (Neil R. Lightfoot, *Everyone's Guide to Hebrews* [Grand Rapids, Mich.: Baker Books, 2002], 95). [23]Bruce, 145. [24]James Burton Coffman, *Commentary on Hebrews* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 157. [25]இந்த சொற்றொடரின் வேறுபாடுகள் மத்தேயு 1:1; 9:27; 12:23; 15:22; 20:30, 31; மற்றும் 21:9, 15 இல் பயன்படுத்தப்படுகின்றன (மேலும் பார்க்கவும் மத். 22:45; மாற்கு 10:47, 48; 12:35; லூக். 1:32; 18:39). [26]Hughes, 259. [27]Donald A. Hagner, *Encountering the Book of Hebrews: An Exposition, Encountering Biblical Studies* (Grand Rapids, Mich.: Baker Academic, 2002), 102. [28]Milligan, 260. [29]Hughes, 264. [30]Milligan, 261.

[31]James Macknight, *A New Literal Translation, from the Original Greek of All the Apostolical Epistles with a Commentary and Notes* (Edinburgh: by the author, 1795; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 539. [32]Bruce, 148. [33]"பயனற்றது" (7:18) என்பது என்ஏஎஸ்பியில் சற்றே கடுமையானதாக இருப்பதாகத் தெரிகிறது, ஏனென்றால் அது நோக்கம் கொண்ட நோக்கத்திற்காக நியாயப்பிரமாணம் நிறைவேறியது, அதாவது,

பாவத்தின் தன்மையை சுட்டிக்காட்டுவது. எனினும், அது நித்திய இரட்சிப்பை நேரடியாக வழங்குவதில் “பயனற்றதாக” இருந்தது. [34]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 82-83, n. It was not the sacrifice so much as the attitude of the worshiper's heart that permitted God to view the sinner as righteous, but even this can only be said in view of the eventual death of Christ for sin. [35]Macknight, 539. [36]Guthrie, 165. [37]Lightfoot, *Jesus Christ Today*, 145. [38]Brown, 134. [39]Josephus *Antiquities* 20.10.1. [40]Josephus *Against Apion* 1.22.

[41]William Barclay, *The Letter to the Hebrews*, 2nd ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1957), 87. [42]Josephus *Antiquities* 20.10.1; *Wars* 4.3.7-8. [43]Reese, 119. [44]Bruce, 154. [45]இங்கு உபயோகிக்கப்பட்டுள்ள நிகழ்கால வினையெச்சம் அவர் தொடர்ந்து பரிந்து பேசிக்கொண்டிருப்பதை அர்த்தப்படுத்துகிறது. (Lightfoot, *Jesus Christ Today*, 146-47.) [46]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 589. [47]Barclay, 89. [48]வேதாகமம் ஆவிக்குரிய “இருள்” பற்றிய குறிப்புகளால் நிறைந்திருக்கிறது (லூக். 1:79; 22:53; யோவான் 1:5; 3:19; 8:12; 12:35, 46; அப். 26:18; ரோமர் 2:19; 13:12; 2 கொரி. 6:14; எபே. 5:8, 11; 6:12; கொலோ. 1:13; 1 தெச. 5:4, 5; 1 பேதுரு 2:9; 1 யோவான் 1:6; 2:8, 9, 11). [49]*Mishnah Yoma* 3.8. [50]Hughes, 275.

[51]Philo *Special Laws* 3.131. [52]Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 127. [53]Bruce, 158-59. Such sentiments are expressed in the apocryphal writings of 2 Maccabees 7:37-40; 4 Maccabees 6:27-30; 17:22; 18:3, 4. [54]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 208. [55]Hughes, 279. [56]மத். 26:30; மாற்கு 14:26; அப். 16:25; ரோமர் 15:9; 1 கொரி. 14:15; எபே. 5:19; கொலோ. 3:16; எபி. 2:12; யாக். 5:13. [57]அப்போஸ்தலர் 2 க்குப்பின், “கர்த்தர்” என்ற வார்த்தை பொதுவாக இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. நாம் உண்மையில் “ஒரே கர்த்தரை” கொண்டுள்ளோம் (எபே. 4:5). [58]This thought was suggested by James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 194-96.